
நீதிக் காவலன்
ஸ்பைடர்!
லயன்
காமிக்ஸ்
ஆசிரியர்:
S.விஜயன்
ரூ.
2.50


விரைவில் வருகிறது...!
ஜூனியர் லயன் காமிக்ஸ்!
ரூ. 1-25


குற்றவியலில் அசகாய சூரனாக விளங்கிய ஸ்பைடர்
என்றாவது ஒரு நாள் குற்றவியல் சக்கரவர்த்தி என்ற
பட்டத்தை பெற வேண்டும் என்பதை இலட்சியமாகக்
கொண்டிருந்தான். ஒரு நாள் காலை—நியூயார்க் நகர்
காவல் நிலையம் ஒன்றில் துப்பறியும் நிபுணர்கள் சமூக
விரோதிகள் சிலரை விசாரித்துக் கொண்டிருந்தனர்...
அந்த நகைக் கடையை கொள்ளையடித்தது நாங்கள்தான் என்று நிரூபிக்க உங்கள் வசம் எந்த ஆதாரமும் கிடையாது
துரதிர்ஷ்டவசமாக நிலைமை அதுதான்—போய்த் தொலையுங்கள்
சட்டத்தின் பாதுகாவலர்களே!—இத்தனை அவசரம் கூடாது!
நீதிக்காவலன் ஸ்பைடர்!



அடப்பாவி— ஸ்பைடர்! சமூக விரோதி நம்பர் 1.
ஆதாரம்... என்னிடம் இருக்கிறது!
இதோ—என் ஹெலிகாரிலிருந்து டெலஸ்கோப் லென்ஸ் பொருத்தப்பட்ட காமராவினால் நான் எடுத்த புகைப்படத்தின் பெரிதாக்கப்பட்ட பிரதி...நகைக்கடையின் சுவரைப் பெயர்த்து அவர்கள் உள்ளே நுழையும் போது எடுத்தது!
எப்போதிருந்து சமுதாய நலத்தில் அக்கறை கொண்ட நயராகமாறினான் இந்த ஸ்பைடர்!



ப்படியில்லை... இது சுய
ல நோக்கோடு செய்யப்
டுவதாகும். குற்றவியல்
கும்பல்களுக்கு எதிராக
தனிப்பட்ட முறையில்
போராட்டம் ஒன்றை
விரமாக நடத்தி வருகி
றேன் நான்...
...அவர்கள் அத்தனை பேரையும்
சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து
கம்பி எண்ணச் செய்து விட்டே
னென்றால் பின்னர் நான்தான்
'குற்றவியல் சக்கரவர்த்தி'—
புரிகிறதா...!
சைத்தானே!
பிடியுங்கள் அவனை...!



நேரடி கைகலப்பின் யுக்திகளை
கையாளுவதில் சமர்த்தனான
ஸ்பைடர் தன் மீது பாய்ந்த திரு
டர்களையே ஆயுதங்களாக்கி, தன்
னைப் பிடிக்க வந்த காவல் துறை
யினர் மீது வீசினான்...
நெருங்காதீர்கள்!


வந்த வேலை முடிந்து விட்டது..
சென்று வருகிறேன்!


நான் தயாரித்து கொடுத்துவிட்டு வந்த கால அட்டவணையின்படி பெல்ஹாம் காரியங்களை செய்திருந்தாரேயானால் இப்போது ஜன்னலின் மறுபக்கம் ஹெலி கார் இருக்க வேண்டும்...


ஸ்பைடரின் எதிர்பார்ப்பு வீணாகவில்லை...
கால நிர்ணய செயல்திட்டம் பிரமாதம் புரபஸர்!
இது ஒன்றும் புதிதல்ல வே...ஸ்பைடர்!



ஸ்பைடர் இங்கே உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து பின்னர் தப்பிச் சென்று விட் டான் என்ற விஷயம் செய்தித் தாள்களில் வெளிவந்தால்...
...போலீஸ்கமிஷனர் நம் சீட்டைக் கிழிக்காமல் விடுவாரா என்பது சந்தேகம்தான்!



அங்கே, ஸ்பைடர் படுகுஷியாக இருந்தான்...
ஹா...ஹா... திருட்டுக் கும்பல் களை நான் பிடித்துக் கொடுக்கி றேனென்றால் அந்த உதவியை காவல்துறையினர் பாராட்டு வதாக தெரியவில்லையே!
விஷமிகளைப் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைப்பது விவேக மான காரியமாகப்பட வில்லை...காவல்துறை யினரைமட்டுமல்லாமல் சமூக விரோதிகளையும் எதற்குப் பகைத்துக் கொள்ள வேண்டும்?



உளறுவதை நிறுத்தப் போகிறாயா இல்லையா ஆர்டினி?
முழுவதும் கேளுங்கள் பாஸ்... இது பைத்தியக் காரத்தனமான செயலாக படுகிறது எனக்கு!
புதுவகை பிளாஸ்டிக்கை உமிழும் இந்த துப்பாக்கியின் செயல்திறனை நடை முறையில் சோதித்துப் பார்க்க வாய்ப் பளித்து விட்டாய்...பன்றிப் பயலே!
சக்!
10


இனியும் ஒரு மணி நேரத்துக்கு நீ வாயைத் திறக்க முடியாது... அதன் பிறகாவது புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள முயற்சி செய்...
ப்...ப்ளப்...க்ர்ர்... ப்ளப்...!
மறு நாள்—பாங்க் ஒன்றை கொள்ளையடித்த பின்னர் அங்கிருந்து தப்பிச் செல்ல வெளியே தயாராக நிறுத்தப்பட்டிருந்த காரை நோக்கி ஓடி வந்தது ஒரு சமூக விரோதக்கும்பல்...
அடேய் கோமாளி... அவசரப்பட்டு சிரிக்கிறாய் நீ!
ஹா...ஹ்...ஹா...! எதிர்பார்த்ததைவிட வேலை சுலபமாக முடிந்துவிட்டது!


ட்டென்று வலைத் துப்பாக்கியை இயக்கினான் ஸ்பைடர்...
லோக கம்பிகளை விட உறுதியான இழைகள் காரின் மீது
ன்னலிட்டுப் படிந்தன...
ஆ...ஸ்பைடர்! இங்கே எங்கே வந்து தொலைத்தான் சனிப்பயல்!


BANK
சாக்கடை மூடியை கேடயமாக பயன்படுத்துகிறான்!
தோட்டாக்கள் சிதறி தெறிக்கின்றன...
டுமீல்!


ஸ்பைடரின் அன்ப
ளிப்பு— இதோ...!


காவல்துறையினர் ரோந்து கார்கள் 'சை
ரன்' ஒலி எழுப்பிக்கொண்டு அங்கே
வந்தன...
வேடிக்கை பார்க்க
நிச்சயம் இவர்கள்
வருவார்கள் என்று
எதிர்பார்த்தேன்!
வலைப் பின்னலிலி
ருந்து விடுவித்துக்
கொள்ள முடிய
வில்லையே!



ஸ்பைடரை சுற்றி வளைத்
துக் கொண்டுவிட்டோம்.
இம்முறை அவன் தப்பு
வது சாத்தியமேயில்லை!
எல்லோரும் கவ
னமாக செயல்
பட வேண்டும்—
தெரிகிறதா?
உங்களுடைய நெடுநாளைய பகற்
கனவை இம்முறையும் கலைக்க நே
ரிட்டதற்காக வருந்துகிறேன்....
இந்த புகைத்திரை என்னை உங்க
ளிடமிருந்து காப்பாற்றும்!



ஹே...ஒன்றையும் பார்க்க முடியவில்லையே!
குள்ளநரிப்பயல் இம்முறையும் நம்பிடியிலிருந்து நழுவி ஓடிப் போய்விட்டானே!
அன்று பிற்பகல்— நகரின் ஒதுக்குப்புறத்திலிருந்த ஒரு பழையகிடங்கின் முகப்புவாயிலில் முரடர்கள் கண்காணிப்போடு காவல் நிற்க, நகரின் பல்வேறு சமூக விரோத கும்பல்களை சார்ந்த பயங்கரவாதிகள் பலரும் அங்கே வந்து குழுமினர்...
காவல்துறையின் குறிப்பேடுகளில்இடம்பிடித்துக் கொண்ட அத்தனை முன்னணி ரௌடிகளையும் இங்கே பார்க்கமுடிகிறது- 'பிச்சுவா' பின்னி 'தலைவாங்கி' தாமஸ், 'அடுத்துக் கெடுக்கும்' ஆல்பர்ட்...
நீ வாயைப் பிளக்கிறதைப்பார்த்தால் அடுத்து அவர்களிடம் ஆட்டோகிராப் வாங்க ஓடுவாய் போலிருக்கிறது- சீ...வாயை மூடு!




சற்று நேரத்திற்குப்பின், உள்ளே—
கூட்டத்தை தொடங்கலாமா... தோழர்களே! இதோ-திரை விலகும் இந்தக் கணத்தை ஸ்பைடருடைய அழவுகாலத்தின் தொடக்கமாக உறுதி செய்வோம்!
அன்பார்ந்த சமூக விரோதிகள் சங்க உறுப்பினர்களே...உங்கள் தலைவனை நான்-நிழல் அரக்கன்-ஸ்பைடரை ஒழித்துக்கட்ட ஒரு அருமையான திட்டம் வகுத்திருக்கிறேன்...


கூடியிருந்த உறுப்பினர்களில் ஒருவன் கோபாவேசமாக கத்தினான்
ஸ்பைடரைஎண்ணி கவலைப்படுமளவுக்கு உன்னைஎண்ணியும் கவலைப்படுகிறேன் நான்...இன்று வரை யாரென்று நாங்கள்பார்த்தறியாத உன்பேச்சைக் கேட்டு நடக்க எனக்கு இஷ்டம் கிடையாது
இம்முறை நிழல் அரக்கன் மிகவும் னையோடு நடந்து கொண்டிருக்கிறார் சுயவுணர்விழக்குமளவுக்கு வெறும் அதிர்ச்சியோடு தப்பித்துக் கொண்டு விட்டான் தாமஸ்...இதைவிட மான தண்டனைக்கு மீண்டும் தன்னை ஆளாக்கிக்கொள்ள துணியமாட்டான் பயல் என நம்புகிறேன்!
...எதிர்வாதம் செய்கிற 'தலைவாங்கி' தாமஸுக்கு என்ன நேரிடுகிறதை என்பதை பார்த்து மற்றவர்கள் பாடம்கற்றுக் கொள்ளுங்கள்!
சாதிக்கவே முடியாதோ என்று திகைக்க வைக்கும் ஸ்பைடரின் அழிவை உறுதி செய்ய நான் தேர்ந்தெடுத்திருக்கும் நபரை உங்களுக்கு இப்போது அறிமுகம்செய்து வைக்கப்போகிறேன்.! இதோ! 'நாசகாரன்'


இதற்கிடையே, பல மைல் தொலைவிலுள்ள ஸ்பைடரின் புதிர்நிறைந்த பாசறையில் பழைய சாதனைகளின் போது எடுக்கப்பட்ட புகைப்பட ஸ்லைடுகளைப் போட்டுப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர்.
ஹா...ஹா...ஹா! பார் அங்கே—என்னுடைய சாதுரியமான குறுக்கீட்டால் காவல் துறையினரிடம் மாட்டிக்கொண்டு விட்ட என் அந்நாள் எதிரி—"மிஸ்டர் மாமம்!"
உங்களுக்கு நிகர் யாருமே இருக்க முடியாது...பாஸ்!



அதேசமயம் அங்கே... சமூக விரோதிகள் சங்க உறுப்பினர் கூட்டத்தில்...
முரட்டு இரும்பு கம்பிகள் கூட நாசகாரனுக்கு ஒரு தடையாக இருக்க முடியாது! ஆனால் இவனிடமுள்ள மற்றவிந்தை சக்திகளோடு ஒப்பிடும்போது இந்த உடல்பலம் மிகச் சாதாரணமாது...இந்த உண்மைகளை உணர நேரிடும் போது ஸ்பைடர் அயர்ந்து போய் விடக்கூடும்!


அங்கே—ஸ்பைடரின் பாசறையில்...
சை!
படார்!
எ...என்ன சமாசாரம்... ஸ்பைடர்?


ஏதோ ஆபத்து வரப்போவதாக என் ஆறாவது அறி
உணர்த்துகிறது...குற்றவியல் சக்ரவர்த்தியாக
வேண்டும் என்ற என் இலட்சியத்திற்கு எதிராக
யாரோ, எங்கோ இந்தக் கணத்தில் திட்டம்
தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்!


சங்க கூட்டத்தில்—
ஸ்பைடரை தீர்த்துக்கட்டும் ஆற்றல் இவனுக்கு இருக்கி றது என் ॥ எப்படி நாங்கள் நம்புவது?
நீங்கள் விரும்பினல் இப்போதே நிரூபித் துக் காண்பிக்கிறேன்!
பயங்க்ரவாதிகள் என்று பெயர் வாங்கிய முரடர் கள் நாசகாரனை குறி வைத்துப் பாய்ந்தனர்...
...சுவையான விளையாட்டு!
கும்!
கும்


என்னை கோபித்துக் கொள்ளாதீர்கள்! நீங்கள் கேட்டீர்கள்—கொடுத்தேன்...அவ்வளவு தான்!
கண்ணிமைக்கும் நேர இடைவெளிக்குப்பின் யாருமே நின்று கொண்டிருக்கக் காணோம்...
உன் உடல் பலம் அபாரமானது—ஆளுல் ஸ்பைடரின் வசம் அற்புத சக்தி படைத்த கருவிகள் நிறையா இருக்கின்றன- அவற்றை நீ எப்படி சமாளிப்பாய்?
அதையும் செயலில் காட்டுகிறேன்! எங்கே—என்னை குறிவைத்து சுடு!



ரு முரடன் தன் துப்பாக்கி
யை எடுக்க முனைந்தான்.
ாசகாரனின் ஹெல்மெட்டி
ிருந்து மின்னலாய் பாய்ந்
து, ஒரு ஒளிக்கற்றை...
ஹா... என் துப்பாக்கி — தொடமுடியாத அளவுக்கு சூடாகி விட்டதே!
என் 'வெப்பக் கதிர்' வீச்சு அமைப்புக்கு நன்றி!



கத்தியை வீசுகிருயா நீ —இதோ...சக்தி-மோதிரத்திலிருந்து வெளிப்படும் வீரியக்கதிர் கத்தியை மிகச் சுலபமாக பல துண்டங்களாக்கி விட்டது பார்!


என்னை நோக்கி கை வெடி குண்டு வந்தால் இப்படி பந்தாட்டம் ஆடிச் சமாளிக்க எனக்குப் பிடிக்கும்!
வெளியே நின்றிருந்த காவலாளிகள் பொறுமையோடு பார்த்தனர்.
உள்ளேயிருப்பவர்கள் வேடிக்கை—விளையாட்டு என்று கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது... நாமும் பங்கேற்க முடியாமல் இப்படி வெளியே காவல் பணியில் மாட்டிக் கொண்டு விட்டோமே!
எவன் எவனோ ஜாலியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறான் உள்ளே!



விட்டதற்காக மன்னிப்பைக் கோருகிறோம். நிழல் அரக்கன் சரியானநபரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பது இப்போது உறுதியாகி விட்டது... அந்தப்பயல் ஸ்பைடர் உன்னை எதிர்த்து ஒரு விநாடி கூட தாக்குப் பிடிக்க முடியாது!
அங்கே ஸ்பைடரின் பாசறையில்...
என்னுடைய ஆருவது புலன் எச்சரித்தஅளவுக்கு நிஜமாகவே ஏதேனும் ஆபத்து எனக்கெதிராக உருவாகி வருகிறதா என்று உறுதி செய்து கொள்ள 'மின்னணு — மதியூகியை' இயக்கிப் பார்த்து விடப்போகிறேன்


ஆவ்...! அனைத்து சிவப்பு விளக்குகளுக்கும் பளிரிடுகின்றன...எச்சரிக்கை மணியும் வலுவாக ஒலிக்கிறது...!
டிங்-டிங்
இதுவரை நான் எதிர்கொண்டு சமாளித்து ஆபத்துக்களைவிட மிக மோசமானதொரு பேரபாயம் உருவாகி வருவதை இது உறுதி செய்கிறது!



அபாயம் தானாக நீங்கும்வரை நாம் பதுங்கி இருந்து விடுவது தான் விவேகமான காரியமாக இருக்கும்!
வாயை மூடடா...தொடை நடுங்கிப் பயலே! பயங்கரவாதிகளையோ, கொடிய விலங்குகளையோ கண்டு அஞ்சி ஒளிபவனல்ல இந்த ஸ்பைடர்! வலுவான எதிரிகளோடு பொருதுவதை பெரிதும் விரும்பி வரவேற்கும்...சிங்கம்!




பின்னர், கழுகு ஒன்று ஸ்பைடரின் பாசறைக்குள் வந்து சேர்ந்தது...
ஹா...என் கையாள் ஒருவன் ஏதோ செய்தி அனுப்பி யிருக்கிறான்!
ம்... ஹென்சிங்க்டனிடமிருந்துவந்திருக்கிறது! யாரோ ஒரு விஞ்ஞானி ராட்சஸ அளவிலான செய்ற்கை வைரங்களை தயாரிக்கும் இரகசிய ஆய்வுகூடத்தின் இருப்பிடம் இந்த வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது...அந்த வைரங்களை நான் கவர்ந்து வந்தால் அது என்னை செல்வச் சீமானாக்கி விடும்!


ஒரு மணி நேரத்திற்குப் பின்—ஹெலிகாரிலிருந்து பாய்ந்து வெளியேறிய ஸ்பைடர் மலை உச்சியிலிருந்த அந்த இரகசிய ஆய்வுகூடத்தை குறி வைத்துப் பறந்தான்
நல்லவேட்டை காத்துக்கொண்டிருக்கிறது!
...ஹென்சிங்டன்! என்ன இது? நீயும் விஞ்ஞானியும் இப்படி கட்டிப் போடப்பட்டிருக்கிறீர்கள்?
உங்களை இங்கே வரவழைக்க அப்படியொரு செய்தியை எழுதியனுப்பும்படி என்னை சிர்ப்பந்தப் படுத்திய நாசகாரனின் சதித்திட்டம் இது...எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்!


மின்னல் வேகத்தில் சுழன்று வந்த சாட்டை ஒன்று ஸ்பைடரை பின்னிக்கொண்டது.
ஸ்பைடரை தாக்கத் துணிந்த அறிவிலி யார்?
சர்வ வல்லமை பொருந்திய நாசகாரன்!


அசகாய சூரன் நீ என்று நினைத் தேன்—சாதாரண சுண்டெலி என்று இப்போது புரிகிறது!



சட்டென்று உடம்பை சுழற்றி தன்னை விடுவித்துக் கொண்டான் ஸ்பைடர்...
கொஞ்சம் பொறு... ஸ்பைடர் யாரென்று புரிய வைக்கிறேன்


யலென பாய்ந்தான், ஸ்பைடர்...
ஸ்பைடரோடு மோதும் தகுதி உனக்கு இருக்கிறதா என்பதை முதலில் நிர்ணயிப்போம்!
வா...வா... அருகே நெருங்கி வந்தால் தெரியும் சேதி!
எதிரி கூறிய வார்த்தைகளின் பொருள் மறுகணமே விளங்கியது ஸ்பைடருக்கு...
க்ளிக்!


குறிப்பிட்ட இலக்கில் ஸ்பைடர் காலை வைத்ததும் மறைவிலிருந்து வெளிப்பட்டது ஓர் அமைப்பு...
ஹா...ராட்சஸ அளவிலான எலிப்பொறி!
மனோ வேக செயல் திறன் கொண்ட ஸ்பைடர் சட்டென்று விலகி தப்பித்துக் கொண்டு விட்டான்...


மயிரிழையில் தப்பிவிட்டாய்... இல்லையா? உன்னிடம் கொஞ்சம் திறமை இருக்கத்தான் செய்கிறது என்ற உண்மையை வேண்டா வெறுப்பாக நான் ஏற்றுக் கொள்கிறேன்...
அந்த அளவு திறமை யாவது உன்னிடம்இருக்கிறதா என்பதில் எனக்குச் சந்தேகம்...!
இந்த விஷ வாயுவுக்கு உன் பதில்?
சோதித்துப் பாரேன்...!
புஸ்ஸ்...!


என் ஹெல்மெட்டிலிருந்து வெளியேறும் விநோத வாயுக் கலவை எந்த ஒரு விஷ வாயுவையும் செயலிழக்கச் செய்து விடும்...!-இனி— என்னுடைய முறை...
சென்ற முறை பல் வைத்தியரிடம் சென்றிருந்த போது தான் இப்படி ஒரு ஆயுதத்தை தயாரிக் கும் யுக்தி என் மூளை யில் உருவானது...!
குடையும் உலோக முனையுடன் கூடிய நீளும் இரப்பர் குழாய்! இநதக் கட்டிடம் எங்கிலும் இது போன்ற விநே ாத அமைப்புகளை ஏற்கனவே வடிவமைத்து வைத் திருக்கிறான் போலி ருக்கிறது!



தன்னை குறி வைத்து நீண்டு வந்த அந்த அமைப்பின் பாதையிலிருந்து விலகித் தப்ப ஸ்பைடர் எத்தனை முயன்றும் அது விடுவதாக இல்லை...
... பின்னுல் சுவர்—மாட்டிக் கொண்டு விட்டேனே?
சாகுமுன் இறுதியாக ஏதாவது சொல்லிக் கொள்ள நீ விரும்பினுல் இதுதான் தருணம்!



இதே வார்த்தைகளை உனக்கு நான் சொல்ல வேண்டிய வேளை வெகு தொலைவில் இல்லை... மூடனே! என் வலைத் துப்பாக்கியின் செயல் திறனைப் பார்...இப்போது!


உறுதியான இழைகளினால் கட்டிப் போட்டு விட்டேன்—இனி இதை காயலான் கடையில் கூட வாங்க மாட்டான்...!
வலைத் துப்பாக்கியின் அடுத்த இலக்கு—...நீ தான்!
முட்டாள்...!


ஹெல்மெட்டிலிருந்து வெளியாகும் வெப்பக் கதிர்கள் உன் வலைத்துப்பாக்கியின் இழைகளை உருக்கிவிடும் ஆற்றல் கொண்டவை...உன்னை விட பராக்கிரமசாலி நான்தான் என்பதைஇப் போதாவது ஒப்புக் கொள்!
ஸ்ஸ்ஸ்...
அவன் தற்பெருமை பேசிக்கொண்டி ருக்கும் வேளையில் இங்கே கிடக்கும் ராட்சஸ செயற்கை வைரத்தை நான் சேகரித்துக் கொள்வேன்!
எதிரியின் தலையைக் குறி வைத்து அந்த வைரக்கல்லை வீசினான் ஸ்பைடர்...
ணங்!
ஆவ்!
என்றைக்குமே என் குறி தப்பியதில்லை தான்...ஹா...ஹா!


புத்திசாலித்தனமான காரியம்
செய்து விட்டதாக நினைப்போ...?
இப்போது பார்...!
நான் இங்கே இருக்கிறேன்...
எங்கோ குறி வைக்கிறயே?
அப்படியில்லே அப்பனே!
பொறுத்திருந்து பார்...!


மேலே சுவரிலிருந்த ஒரு தாழ்ப்பாளை தகர்த்தது—அதன் விளைவாக...
சட்!


சிறு அலமாரி ஒன்று திறந்து கொள்ள, ராட்சஸ வடிவிலிருந்த செயற்கை வைரக் கற்கள் ஆலங்கட்டி மழைபோல் ஸ்பைடரின் மீது பொழிந்தன...
என்னை அப்படியே பிழிந்து விட எண்ணமோ?
உனக்கு ஏற்ற தொரு முடிவாக இருக்கக் கூடும் இது...! ஹா... ஹீ...ஹீ!


பராக்கிரமசாலியான நான் அகப்பட்டுக் கொண்டிருந்தால்கூட இந்த ஆபத்திலிருந்து உயிரோடு மீள முடியாது—இந்த ஸ்பைடர் எம்மாத்திரம்?
இவனுடைய இதயத்துடிப்பு நின்று போய் விட்டதை உறுதி செய்துகொண்ட பின் என்னுடைய இந்த சாதனையை சமூக விரோதிகள் சங்கத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தப் போகிறேன்!


அட... என்ன இது...
நாடிபிடித்துப் பார்க்
கலாம் என்று அவனு
டைய கையைத் தொ
ட்டால்எதுவுமே அகப்
பட வில்லேயே!
ஸ்பைடரின் கை
மெள்ள மறைகி
றது...ஒரே புதி
ராகஇருக்கிறதே!
புதிர் ஒன்றுமில்லே இதில்—
இதோ இருக்கிறது பார்
என்னுடைய ஃகை...!
40


காமல் காரியத்தில் இறங்கினான் ஸ்பைடர்
கும்!
என்பதை இந்தக் குத்து உனக்கு உணர்த்தும்!
இது உனக்கு எப்படி சாத்தியமாயிற்று என்பதுதான் விளங்கவேயில்லை!
சொல்கிறேன்...!


ஹிப்னாட்டிஸ வசிய சக்தி என்னிடமுண்டு, என்னை பெரிதும் எதிர் நோக்கி காத்திருந்த நீ இது வரை பார்த்ததெல்லாம் என் பிம்பத்தைத்தான்!
இது வரை நடந்த வேடிக்கை நாடகத்தை டி. வி. யில் அப்படியே ஒளி பரப்ப ஏற்பாடு செய்திருந்தால் இப்போது நான் சிரிக்கும் இந்த மாதிரியான கேலிச் சிரிப்பை டி. வி. பார்க்கும் அத்தனை பேர் முகத்திலும் கண்டிருக்கலாம்...ஹா...ஹா!
உன்னை —
42




மறுபடியும் கிட்டே வர உனக்கு என்ன தைரியம்...?
சத்!
ஆனால் ஸ்பைடர் கொஞ்சமும் எதிர்பாராத திருப்பம் அப்போது திகழ்ந்தது அங்கே
ஒரு கெட்ட சேதி...ஸ்பைடர்! அப்படியொரு செய்தி அனுப்ப நான் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதாக சொன்னேனில்லையா—அது பொய்!
நானும் இப்போது சமூக விரோதிகள் சங்கத்தினரின் பக்கம் சேர்ந்து விட்டதால் என் இலட்சியமும் கூட — உன்னுடைய வீழ்ச்சிதான்!



வைத்திருப்பவைகளும் செயற்கை வைரங்களல்ல ஸ்பைடர்—வெறும் கண்ணாடியினால் தயாரிக்கப்பட்ட போலிகள்!
இந்தா...தட்டில் வைத்துக் கொடுக்காத குறையாக லட்டுப் போல் உன்னிடம் கொடுக்கிறோம் ஸ்பைடரை—உன் இஷ்டம் போல் தீர்த்துக்கட்டு!
பழிக்குப் பழி!


ஆனால் நாசகாரன் ஸ்பைடரின் மீது பாயவில்லை! மாறாக...
என்னுடைய இலட்சிய வெறியில் குறுக்கீடு செய்த குள்ள வாத்து மூடர்களே...!


... வேறொருவரின் உதவியோடு ஸ்பைடரை ஒழித்துக் கட்டினால் முழுமையான புகழுக்கு அருகதையற்றவனாகி விடுவேன்... இதைப் புரிந்து கொள்ளத் திராணியில்லாத சொறிநாய்களே ஒழிந்து போங்கள்!


ஸ்பைடரை தேடிப்பிடித்து ஒற்றைக்கு ஒற்றை நேரடியாக மோதி அழிந்து சரித்திரத்தில் இடம் பெற எண்ணி அதற்கான திறமைகளை வளர்த்துக் கொள்ள வாழ்நாள் முழுவதையுப் செலவிட்டிருக்கிற எனக்கு வேறு எந்த அடிமடையர்களின் உதவியும் தேவையில்லை...
ஓடிப் போய்விட இதுதான் தக்க தருணம்!
... இன்னொரு பொறியில் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோம் என்று தெரி யாமல் ஓடுகிறான்!


ஆனால் கடைசி நொடியில் தான் ஆறாவது அறிவு விடுத்த எச்சரிக்கையை கேட்டு சட்டென நின்றான் ஸ்பைடர்...
ஆவ். இன்னும்ஒரு அடி எடுத்து வைத்திருந்தேனென்றால் பல இலட்ச வோல்ட் சக்தியுள்ள மின்சாரம் என்னை இந்நேரம் எரித்துச் சாம்பலாக்கி விட்டிருக்கும்!


மேலே இருந்து தொங்கிய ராட்சஸ அளவிலான காந்தத்தை ஸ்பைடரை நோக்கித் தள்ளி விட்டான் நாசக்காரன்...
ஒன்றை மட்டும் நினைவு வைத்துக் கொள் ஸ்பைடர்— இங்கிருந்து நீ உயிரோடு வெளியேறப் போவதில்லை?
என் கபால ஓட்டை சிதறடிக்கும் முயற்சியோ இது?


இந்த இரும்பு தடியை இப்படி காந்தத்தோடு ஒட்ட வைத்துக் கொண்டால் இதுவே இங்கிருந்து நான் வெளியேற உதவும் சாதன மாகி விடும்...!
அடுத்த யுக்தியை கையாளுவேன்...!



இந்த விஷ அம்பு என் இலட்சியத்தில் தான் வெற்றியடையச் செய்யும்!
ஆனால்...ஸ்பைடர் சர்க்கஸ் வேலை செய்து தப்பித்துக் கொண்டு விட்டான்...
இப்படியே அந்த திறப்பின் வழியாக பாய்ந்து வெளி யேறி விட வேண்டும்...
சொய்ங்!


வெளித்திட்டுக்கு வந்து சேர்ந்த ஸ்பைடர் உரக்க குரல் கொடுத்தான்...
ஹெலி—கார்!


ஸ்பைடரின் குரலை இனம் கண்டு கொள்ளும் திறன் வடிவமைக்கப்பட்ட ஹெலிகார் கீழிறங்கி நேரே வந்தது... ஸ்பைடரை பிடித்து விட எண்ணி ஜன்னலில் ஏறிய நாசகாரனின் முகத்தில் ஏமாற்றம் குடி கொண்டது...
என்னிடமிருந்து நீ தப்பவே முடியாது...ஸ்பைடர்!
அங்கே தான் நீ தப்புக் கணக்குப் போடுகிருய்! முதல் சுற்று போட்டியில் நான்தான் வென்றேன்... ஹாஹ...ஹா!
ம்...உச்ச வேகத்தில் போக வேண்டும்— புரிகிறதா!




க்ராாக்!
என் வெப்பக் கதிர் வீச்சின் வரம்பைத் தாண்டிச்சென்று விட்டதால்பிழைத்தாய்... ஆனல் என்றைக்கு இருந்தாலும் உனக்கு எமன் நான்தான் என்பதை மட்டும் மறந்து விடாதே!...
...நாசகாரனை வென்று விட்டதாக மனப்பால் குடிக்காதே! மீண்டும் மீண்டும் உன்னைவந்து சந்திப்பேன் —புதுப்புது யுக்திகளோடு! தம் அடுத்த சந்திப்பு மிக விரைவிலே யே இருக்கும் என்பதை தெரிந்துகொள்!


இது நிகழ்ந்து ஒரு வாரத்திற்குப்பின்—திடீரென்று வானத்தில் மிதந்து வந்தது பெரிய கோளம் ஒன்று. சந்தடி மிகுந்த நியூயார்க் டைம்ஸ் சதுக்கத்தில் இந்த விந்தைக்காட்சியால் போக்குவரத்து அப்படியே நின்று போனது.
பூவுலக மாந்தருக்கு! ஒலாரா ஈரகதனைச் செய்த நாங்கள் உங்களுக்கு மனமுவந்து அளிக்கும் அரிய அன்பளிப்பு இந்த 'பொக்கிஷ கோளம்'



மெள்ள கிழிறங்கி வந்த அந்த கோளம் ஓசையின்றி தரையை தொட்டது...
உங்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் கலாசார வளர்ச்சிக்கும் உதவக் கூடிய புதுமை கருவிகள் பல கோளத்தினுள் உள்ளன ... சரியாக மதிய வேளை மணி 12-00 க்கு தானாக திறந்து கொள்ளும்படியான கட்டமைப்பு கோளத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது...
கிடைப்பதற்கரிய வரப்பிரசாதம் இது!
இந்த விந்தை சம்பவம் காட்டுத் தீ போல் நகரின் நாலாதிசைகளிலும் பரவியது... அது ஸ்பைடரின் கவனத்துக்கும்வந்து சேர்ந்தது...
என் இலட்சியதை நான் வேகமாக முன்னேறிச் சென்று வெற்றிக்கோட்டை தொட இந்தக்கோளம் எனக்கு உதவக் கூடும். இந்த கோளத்தை நான் கவர்ந்து இழுத்து வர முடிந்தால் அதுவே நான் ஈட்டிய வெற்றிகளை மிஞ்சிய ஒரு சாதனையாக அமையக் கூடும்.


11-30 மணி அளவில் — அதாவது கோளம் தானாக திறந்து கொள்வதற்கான கெடுவுக்கு இன்னும் அரைமணி நேரமே இருந்த போது, அங்கே ஆவலோடு குழுமியிருந்தவர்களிடமிருந்து திடீரென்று நிராசை வார்த்தைகள் வெளிவரலாயிற்று
அதோ ஸ்பைடரின் ஹெலி — கார்! இங்கேயும் வந்து விட்டான்!
கோளத்தை கடத்திச் செல்வதுதான் அவனுடைய நோக்கமாக இருக்கும்!
அவனுடைய எண்ணம் ஈடேற விடாமல் எப்படியேனும் தடுத்தாக வேண்டும்
ஹெலிகாரை நோக்கி போலீஸார் சரமாரியாக சுட்டனர்...
தோட்டா பாய முடியாத ஹெலிகாரை குறி வைத்து வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள் ... முட்டாள்களா!
டுமீல்! டுமீல்! டுமீல்!


கோளத்தை உறிஞ்சி எடுத்துக் கொண்டு மீண்டும் மேலே எழும்பத் தொடங்கியது ஹெலி-கார்...
சமூக விரோதிகள் சங்கத்தினரை பூண்டோடு அழிக்க இந்த கோளம் எனக்கு உதவப் போகிறது...ஹ ஹ்...ஹா!
பகல் கொள்ளை—தட்டிக் கேட்க நாதியில்லை!
மறுகணம் -
போர் விமானங்கள் அணி வகுத்து வருகின்றன. இம்மாதிரி யான அசம்பாவிதங்களை நான் கண்டுபிடித்திருக்கும் புது வகை வாயுவை பயன்படுத்தி சுலபமாக சமாளித்து விடலாம்!


மறுகணம் -
என் எஞ்சினில் ஏதோ கோளாறு — திணறுகிறது...! மற்ற விமானங்களுக்கும் இதே கதிதான்!— ஹெலிகாரிலிருந்து வெளிப்படும் வாயு எஞ்சினின் இயக்கத்துக்கு ஊறு விளைவிக்கிறது என்று நினைக்கிறேன்— அனைத்து விமானங்களும் உடனே தரையிறங்க லீடர் நான் உத்தரவிடுகிறேன்...



ஹெலிகாரின் வேகத்தை உச்சப்படுத்தி அங்கிருந்து அகன்றான் ஸ்பைடர்...
விர்ர்ர்...
அவனுடைய சகாக்கள், ஏற்கனவே வகுத்த திட்டப்படி, காத்துக் கொண்டிருந்த மலைக் கணவாய் பகுதியை சென்றடைந்தது ஹெலி-கார்...
பிரமாதமான சாதனை...!
ஸ்பைடரா... கொக்கான்னானும்!


மணி சரியாக 12-00 ஆனதும்...
ஹே...கோளத்தின் கதவு தானாகவே திறந்து கொண்டு விட்டது! வாருங்கள் ஓடிப்போய் உள்ளே அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்க்கலாம்!
கிட்டே சென்றீர்களோ — காலை ஒடித்து விடுவேன்!



வேறு கிரகத்தினர் அனுப்பி வைத்திருக்கும் பரிசுப் பொருட்களை முதலில் பார்க்கும் உரிமை எனக்குத் தான் உண்டு...தான் அனுமதி வழங்குமுன் யாராவது உள்ளே வர முயற்சித்தீர்களோ... தோலை உரித்து விடுவேன்— ஜாக்கிரதை!
ஆனால் ... ஸ்பைடர் உள்ளே போனதும் கதவு சட்டென்று மூடிக்கொண்டு விட்டது!
ஐயோ...இது என்ன விபரீதம்!
டம்!
உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க முடியவில்லையே!



ஆனால்ஸ்பைடருக்கு தான்சிறைப் படுத்தப்பட்டிருக்கிற விஷயம் தெரியாது!
ப்பூ...இந்த சின்னஞ் சிறு பெட்டிக்குள் அப்படி என்ன பிரமாதமாக இருந்து விடப்போகிறது...என் பெரும் பிரயத்தனம் அர்த்தமற்றதாகி விடுமோ?
ஆனால் —
உனக்கு நேரப்போகும் கதியை சுட்டிக்காட்டும் முன்னோடிக் காட்சி இது ... ஸ்பைடர்!
அஹ்...!என்னைப்போலவே வடிவமைக்கப்பட்ட மெழுகுச் சிலை!



அப்போது சுவரிலிருந்த மறைப்பு ஒன்று விலகிக் கொள்ள —
மின் விசையால் இயங்கும் உலக்கைகள் இருபுறமிருந்து தாக்கி உன்னைத் தூளாக்குவதன் மூலம் மரணம் சம்பவிப்பதை நீ விரும்புகிறாயா...?
கும்!
கும்!
கும்!
அல்லது வேறு வகை யுக்தியை நான் கையாளவேண்டும் என நீ விரும்புகிறாயா?
இந்த ஆணவக்குரல் நாசகாரனுடைய குரல் போல் இருக்கிறதே ... அப்படியானால் — இந்தக் கோளம் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்தது இல்லையா!


கரெக்ட்! எந்த ஒரு அரிய பொருளையும் தன்னுடையதாக்கிக் கொண்டுவிட துடிக்கும் உன் பேராசை குணத்தை அறிந்துதான் அப்படியொரு பொய்யை சொல்லி வைத்தேன்— நான் எதிர்பார்த்த மாதிரியே நான் வைத்த பொறியில் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டாய் ... உன் மாதிரியே வடிவமைக்கப்பட்ட அந்தமெழுகுச் சிலையைகவனி.
என்ன அருமையான ஷவர்பாத் பார்த்தாயா! ஆஹா பூப்போல் கொட்டுவது தண்ணீர் அல்ல- அமிலம்! உன் அனைத்து துன்பங்களையும் அப்படியே கரைத்து சென்று விடும்!
உன்னுடைய அகங்காரப் பேச்சைக்கேட்டு எனக்கு குமட்டுகிறது...சனியனே!


இதுவும் பிடிக்கவில்லை என்றால் இருக்கவே இருக்கிறது லாசர் கதிர்கள்—கண்ணிமைக்கும் பொழுதில் உன்னை இரு கூறாக்கிவிடும்!
அந்த பொம்மைக்கு நேர்ந்த கதி எந்தக் கணமும் எனக்கு நேரிட்டு விடலாம்... இங்கே இருப்பது ஆபத்து— ஓடிப்போய் விட வேண்டும்!
ஊஹூம்... வீண் முயற்சி வேண்டாம்! கதவை நீ திறக்கவே முடியாது ஸ்பைடர் அது மட்டுமல்ல... இங்கிருந்து உயிரோடு வெளியேறுவதும் சாத்தியமில்லை...புரிந்துகொள்!
வீணாக கனவு காண்கிறாய்...ஸ்பைடரை அழிப்பது அத்தனை சுலபமல்ல— கோமாளித்தனமாக ஏதாவது செய்து நீ அழிந்து போகாதே!



இதை ஸ்பைடர் முழுவதுமாக சொல்லி முடிக்கு முன் நாலா திசைகளிலிருந்தும் சுருள்விசையால் இயக்கப்பட்ட பல பொருட்கள் தோட்டா பாய் வது போல் வந்து ஸ்பைடரை தாக்கின...
இந்த விளையாட்டாவது பிடித்திருக்கிறதா — முகத்தில் ஏன் அத்தனை கடுமை...ஹாஹ்ஹா!
உனக்கொரு முடிவுகட்டாமல் நானும் இங்கிருந்து போகப் போவதில்லையடா—மூடா!


பதிவு செய்யப்பட்ட நாசகாரனின் குரல் தொடர்ந்து எக்காளமிட்டுக் கொண்டிருந்தது...
இன்னும் கொஞ்ச நேரத்தில் உணர்ச்சிகளற்ற சதைப்பிண்டமாகி உயிரை விடப்போகிறாய் நீ...



விண்வெளியில் சுற்றிக் கொண்டிருந்த ஒரு செயற்கை கிரகத்தின் மூலம் அந்த காட்சியினை நாட்டு மக்கள் அனைவரும் காணும்படி ஏற்பாடு செய்திருந்தான் நாசகாரன்...
ஸ்பைடருக்கு ஏற்ற முடிவுதான் இது... பலாத்காரத்தினால் வெற்றிகளை ஈட்டி வந்த அவன் பலாத்காரத்தினாலேயே அழியப் போகிறான் இப்போது...


திடீரென்று கோளத்தின் சுவர்கள் பார்வை ஊடுருவும் தன்மை கொண்டதாக மாறின!
நான் படும் அவஸ்தையை என் சகாக்கள் பார்க்கட்டும் என்பதற்காக இந்த ஏற்பாடா?
இல்லை—நீ எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக வதைபட்டுச் சாகிறாய் என்பதை அவர்கள் பார்க்கப் போகிறார்கள்!
சட்டென்று கோளம் அசுர கதியில் சுழலத் தொடங்கியது...
பாஸ்! இங்கிருந்து அங்கே... மேலிருந்து கீழே என்று மாறி மாறிப் போய் சுவரில் மோதுகிறார்... இந்நிலை நீடித்தால் சீக்கிரமே செத்துப் போய் விடக் கூடும்.
ஸ்பைடரை எவ்வாறு மரணம் வந்து அரவணைத்துக் கொள்கிறது என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காட்சியை காணும் அரிய வாய்ப்பு அவனது சகாக்களான உங்களுக்குக் கிட்டியிருக்கிறது இப்போது!



அந்தக் கோளம் இந்த மலைக்கணவாய்ப்பகுதி முழுவதும் அசுர வேகத்தில் சுற்றிக்கொண்டு வருகிறது ... இங்கிருந்து உடனே ஓடிப் போனால் அன்றி நம் தலைக்கும் ஆபத்து வந்துவிடும்!


பதிவு செய்யப்பட்ட நாசகாரனின் குரல் தொடர்ந்து எக்காளமிட்டுக் கொண்டிருந்தது...
இன்னும் கொஞ்ச நேரத்தில் உணர்ச்சிகளற்ற சதைப்பிண்டமாகி உயிரை விடப்போகிறாய் நீ...



விண்வெளியில் சுற்றிக் கொண்டிருந்த ஒரு செயற்கை கிரகத்தின் மூலம் அந்த காட்சியினை நாட்டு மக்கள் அனைவரும் காணும்படி ஏற்பாடு செய்திருந்தான் நாசகாரன்...
ஸ்பைடருக்கு ஏற்ற முடிவுதான் இது... பலாத்காரத்தினால் வெற்றிகளை ஈட்டி வந்த அவன் பலாத்காரத்தினாலேயே அழியப் போகிறான் இப்போது...
68



காப்ஸ்யூல் ஒன்று வெடித்து ஒரு வகை வாயு கோளத்தினுள் பரவத் தொடங்கியது.
இந்த விஷவாயுவை சுவாசிக்க நேரும் எந் நபரும் இரண்டு நிமிடங்களுக்கு மேல் உயிரோடு இருக்க முடியாது... நீ இப்போது என்ன செய்யப் போகிறாய் ஸ்பைடர்?


வலைத் துப்பாக்கியை இயக்கி தான் தயாரித்த வலைப்பின்னல் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த ஸ்பைடர் துள்ளி எழுந்தான்...
ம் ... இப்படிச் செய்தால் என்ன!


அருகேயிருந்த விசையை முடுக்கினன் ஸ்பைடர்—மிகுந்த நம்பிக்கையோடு, அவனுடைய நம்பிக்கை வீண் போக வில்லே!
பலே...! கோளத்தின் சுவர் வெளியிலிருந்து தகர்க்க முடியாத அளவுக்கு உறுதியானதாக இருக்கலாம் ...நாசக்காரனின் அமிலம் ஷவரும் ...மின் இயக்க உலக்கைகளும் ஏற்கனவே சுவரின் உள்பக்கத்தை பலவீனப்படுத்திவிட்டிருக்கின்றன.



... மிச்சத்தை இந்த லாசர் கதிர் வீச்சு கவனித்துக் கொள்ளும்
மறுவினாடி — கோளத்தின் சுவரில் ஏற்பட்ட ஓட்டையின் வழியாக வெளியே பாய்ந்தான் ஸ்பைடர்!
ஒரு வழியாக வெளியேறி விட்டேன்!
வெளியேறிவிட்டதால் தப்பிவிட்டதாக தப்புக்கணக்கு போடாதே ஸ்பைடர்! சுவரில் ஏற்பட்ட ஓட்டை வழியாக வெளிக்காற்று உட்புகும்போது உள்ளே அழுத்தம் ஏற்பட்டு கோளம் பயங்கரமாக வெடித்துச் சிதறப் போகிறது... அப்போது இந்த மலைக்கணவாய் மொத்தமும் கிடுகிடுக்கும்—யாருமே உயிர்பிழைக்க முடியாது!


அந்த அசம்பாவிதம் நிகழும் போது நான் இங்கே இருந்தால் தானே?
ஹே...பாஸ்! எங்கள் கதி என்ன?


ஏன் இப்படி அலறுகிறீர்கள் —முண்டங்களா! இதோ ...நான் தொங்கவிடும் கம்பிகளை பிடித்துக்கொள்ளுங்கள்—சீக்கிரம்...!


மறுகணம் --
ஊ ஊய் ... ய்ய்!
டமால்
ஆ...வ்!


அந்தக் காட்சியை பல்லாயிரக்கணக்கானோர் டி. வி. யில் பார்த்துக் கொண்டிருந்தனர்...
அயோக்கிய ராஸ்கல்... தப்பிவிட்டானே!
பூனைக்கு ஒன்பது உயிர்கள் என்பார்கள் ... இவனுக்கு ஒன்பதாயிரம் உயிர்கள் இருக்கும் போலிருக்கிறது!


வர்களில் சமூக விரோதிகள் சங்கத்தினரும் அடங்குவர்.








திடீரென்று முரட்டு கைகள் இரண்டு நீண்டு வந்தன...
உஷ்ஷ்...! உள்ளேயிருப்பவன் பெரிய ராட்சஸனாக இருப்பான் போலிருக்கிறதே!
ஆஆ...வ்!
உள்ளுக்குள்ளேயே கலகத்தை தூண்டுபவர்களை நான் மன்னிப்பதற்கில்லை!


என் மீது உங்கள் அனைவருக்கும் பூரண
நம்பிக்கை இருக்கிறதா என்று உறுதி
செய்து கொள்ள விரும்புகிறேன்...!
நாசகாரனைக் கொண்டு ஸ்பைடரை
அழிக்க நான் மேற்கொண்டிருக்கும்
முயற்சி தவறு என்று சொல்பவர்கள்
உங்களில் யாரேனும் உண்டா...?—ம்...
ஒருவர்கூட இல்லை!... பிரமாதம்! அந்த
முயற்சி தொடரட்டும் என்று ஏகமன
தாக தீர்மானிக்கப்பட்டதாக
அறிவிக்கிறேன்!
ஸ்பைடரும் அவனது சகாக்களும்
இருப்பிடத்துக்கு திரும்பி வந்த
டைந்த பின்—
மரணத்தின் பிடியிலிருந்து
நீங்கள் தப்பியதுமின்றி
எங்களையும் காப்பாற்றி
விட்டீர்கள் ... அதை
எண்ணி உற்சாகமாக
இராமல் நீங்கள் இப்படி
மூடு வாயை! செய்தித்
தாள்களில் இதைப்
பற்றி பக்கம் பக்கமாக
எழுதியிருக்கிறான்கள்—
நான் அனுபவித்த
அந்த அவஸ்தையை
டி. வி. மூலம் பல்லா
யிரக்கணக்கான மக்கள்
கண்டு ஆனந்தித்தார்
கள் என்று.


என் மீது உங்கள் அனைவருக்கும் பூரண நம்பிக்கை இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள விரும்புகிறேன்...! நாசகாரனைக் கொண்டு ஸ்பைடரை அழிக்க நான் மேற்கொண்டிருக்கும் முயற்சி தவறு என்று சொல்பவர்கள் உங்களில் யாரேனும் உண்டா...?—ம்... ஒருவர்கூட இல்லை!... பிரமாதம்! அந்த முயற்சி தொடரட்டும் என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்!


ஸ்பைடரும் அவனது சகாக்களும் இருப்பிடத்துக்கு திரும்பி வந்தடைந்த பின்—
மரணத்தின் பிடியிலிருந்து நீங்கள் தப்பியதுமின்றி எங்களையும் காப்பாற்றி விட்டீர்கள் ... அதை எண்ணி உற்சாகமாக இராமல் நீங்கள் இப்படி—
மூடு வாயை! செய்தித் தாள்களில் இதைப் பற்றிபக்கம் பக்கமாக எழுதியிருக்கிறான்கள்—நான் அனுபவித்த அந்த அவஸ்தையை டி. வி. மூலம் பல்லாயிரக்கணக்கானமக்கள் கண்டு ஆனந்தித்தார்கள் என்று.


அக்ஷர்க் தேவதையின் நீரு
அணை—இனி என் தலையாய
பணி...நாசகாரனை
அழிப்பதுதான்!
கொஞ்சமும் எதிர்பாராத
வகையில் அந்த பழங்கால
சிலை இரண்டாக பிளந்து
கொள்ள—
உள்ளே கூடாக இருக்கும் இந்த
சிலை எனக்கு தக்கதொரு மறை
விடமாக பயன்பட்டது ஸ்பைடர்!
உன்னை உன்னுடைய இருப்பி
டத்திலேயே எதிர்த்துப்போரிட்டு
அழிப்பதில் கூடுதல் இன்பம்
இருக்கக்கூடும் என்று இங்கே
யே வந்து விட்டேன்!
யார் யாரை
அழிக்கிறார்கள்
என்று இப்போ
தே பார்த்து
விடலாம்...வா!
77


என் துப்பாக்கிகளைக் கொண்டே உன்னை என்னால் தீர்த்துக் கட்டிவிட முடியும்!
அவற்றை எனக்கு கொஞ்ச நேரம் இரவல் கொடேன்!
காற்றில் பறந்த துப்பாக்கிகளை லாவகமாக பாய்ந்து பற்றிக் கொண்டான் நாசகாரன்...
வாயுத்துப்பாக்கி...! வலைத் துப்பாக்கி...! ஹாஹ்ஹா... உன்னுடைய சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இரண்டும் இப்போது என் வசம்!


வலைத் துப்பாக்கியிலிருந்து உறுதியான இழைகள் தொடர்ந்து வெளிவரத் தொடங்கின...அதேசமயம் வாயுத் துப்பாக்கியும் உறைந்து போகச் செய்யும் திறன் கொண்ட வாயுவை பீச்சியது. ஸ்பைடரின் சகாக்கள் அனைவரும் நொடியில் இயக்கமிழந்து போயினர்...
ஒரே அடியில் உன் கூடுதல் பலம் மொத்தத்தையும் முடக்கிப் போட்டு விட்டேன் பார்த்தாயா! இனி — ஒற்றைக்கு ஒற்றை...ஒருகை பார்த்து விடலாம் ஸ்பைடர்!
ஹா ஆ...! பாதிப்பேரை கட்டிப் போட்டு ... மீதிப் பேரை மயக்கமுறச் செய்து விட்டாயே!


இனி உன்னை அழிக்க எனக்குஇந்த துப்பாக் கிகள் தேவையில்லை
இந்த பட்டனை நான் அழுத்தினால் அந்த ஜன்னலருகே உள்ள ஒரு திறப்பு விலகி அழிவுக் கதிர் வெளிப்படும்
ட்டனை அழுத்தியதும் சட்டென்று எதிரி
து பாய்ந்து தள்ளினான் ஸ்பைடர்
இன்னும் கொஞ்ச தூரம் இவனை நகர்த்திவிட்டே னென்றால் அழிவுக்கதிரின் ஆதிக்க எல்லைக்குள் இவனு டைய தலை இருக்கும்!


ஆனால் நாசகாரன் ஸ்பைடர் கணித்ததைவிட கூடுதல் பலம் பொருந்தியவனாக இருந்தான்...
ஜாலியாக இருக்கிறதா... தம்பி!
நாசக்காரனால் தூக்கி எறியப்பட்ட ஸ்பைடர் போய் விசை மீது மோதியதால் அழிவுக்கதிர் வீச்சு அணைக்கப்பட்டு நின்று போனது.
ஹா...ஹ ஹா... போய்த் தொலை!


உனக்கு நேரப் போகும் விளைவுகளுக்கு இப்போது ஒரு மாதிரி காட்டினேன்!
நான் திருப்பித் தாக்கும் போது இத்தனை மகிழ்ச் சியாக இராது உனக்கு!
ஒரே அடி—உன் மண்டையை பிளக்கிறேன் பார்!
சிறுபிள்ளைத்தனமான உன் செயலைக் காணும் போது சிரிப்புத் தான் வருகிறது...எனக்கு!


உலோகத்தாலான இ
சும்மா காகிதத்தை கிழிப்ப
போல் எப்படி சுலபமாக
கிழிக்கிறேன் பார்...
ஹாஹ...ஹா!
இரண்டு துண்டங்களாக்கியபின் அதைக் கொண்டே ஸ்பைடரை ஓங்கி அடிக்க நாசகாரன் பாய்ந்த போது ஸ்பைடர் லாவகமாக தப்பித்துக் கொண்டு விட்டான்.
நான் தப்பியது ஆச்சரியம் தான்!



சட்டென்று ஓடி ஒரு விசையை இழுத்தான் ஸ்பைடர். மறுகணம் இரு கருஞ்சிறுத்தைகள் ஒரு திறப்பின் வழி பாய்ந்து வெளிப்பட்டன...
என் செல்லப் பிராணிகளை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்!
க்ர்ர்...
ஆஹா... இவைகளை சந்திப்பதில் எனக்கும் மகிழ்ச்சியே!
க்ர்ர்...


ஸாங்!
பார்த்து விடலாம்!
வேண்டுமானால் உன் அழிவை ஓரிரு நிமிடங்கள் ஒத்திப்போட இவை உதவக்கூடுமே அல்லாமல் உன்னை என்னிடமிருந்து காப்பாற்ற உதவப்போவதில்லை...
உனக்கு அறிமுகப்படுத்தி வைக்க இன்னும் சில விநோதங்கள் என் கைவசம் இருக்கின்றன... இதோ— உன்மாதிரி திடீர் விருந்தாளிகளுக்காக எப்போதும் தயாராக இருக்கும் கொதிக்கும் உலோகக் குழம்பில் குளித்துப் பாரேன்!


ஆனல், மறு விநடி, கீழ் நோக்கி இறங்கி வந்த உலோகக் குழம்பு அப்படியே உறைந்து நின்று விட்டது.
ஷ்ஷ்ஷ்...!!
இதிலிருந்தும் தப்பிவிட்டானே சனிப்பயல்!
என் ஹெல்மெட்டிலிருந்து அதீத குளிர்ச்சிக்கதிர்களை வெளிப்படுத்தவும் முடியும்—புரிந்துகொள்!


சுவரினுள் ஒளிந்திருந்து விசையை
நான் இயக்கியதும் புயலாய்
பாய்ந்து வெளிப்படும் ஈட்டிகளுக்கு
அவனால் நிச்சயம் ஈடு கொடுக்க


கால் கட்டை விரலில் எம்பி நின்று குருவளியாய் சுழன்ருன் நாச்காரன்...
டிங்!
டிங்!
டமால்!
என் மோதிரம் வெளிப் படுத்தும் வீரியக் கதிர்கள் உன் ஆயுதங்களை தூள் தூளாக்கி விடும்... ஸ்பைடர்!
வேருெரு யுக்தியை கையாண்டான் ஸ்பைடர்—
சர்ர்ர்...
இதோ... அவனுடைய ஹெல்மெட்டை அப்புறப்படுத்தி விட்டேன்! அதி பயங்கர கதிர் வீச்சுக்களை இனி அவன் வெளிப்ப டுத்த முடியாது!



விழுந்த பலமான அடியிலே நிலை குலைந்து சரிந் தான் நாசகாரன்.
விரிய மோதிரத்தையும் கழற்றிவிட இதுவே தருணம்!


அடுத்து ஸ்பைடர் நாச காரனின் மீது ஓங்கி வீசியெறிந்த மேஜை பல துண்டங்களாகிப் போனது
மரண அடி...!
டமால்







மூர்ச்சித்து விழும்படி செய்து விட்டேன்...!
ஹா...ஹ்...ஹா! சிங்கத்தின் குகையினுள் வந்து வாலாட்டத் துணிந்த சிறுமதி படைத்த நரிப் பயலுக்கு தக்கபடி பாடம் புகட்டி விட்டேன்...ஹீஹ்ஹீ...!
மறுகணம்-நாசகாரன் தன் கால்களைசட்டென்று தூக்க, அவனுடைய காலணிகள் தோட்டாக்களைப் போல் சீறிப்பாய்ந்துஸ்பைடரைத் தாக்கின...
மர்ம விசை அமைப்புக் கொண்ட காலணிகள் என்னுடையவை என்ற உண்மை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!



நினைவு திரும்பிய போது—
அந்த... துப்பாக்கி?
சாதாரண துப்பாக்கிதான்— உன் சகா ஒருவனிடமிருந்து எடுத்துக் கொண்டேன்... நீ அற்பப் புழு! உன்னைக் கொல்ல கௌரவமான வேறு யுக்திகளைக் கையாள தேவையில்லை—சாதாரண தோட்டா போதும்!
அப்போது ஸ்பைடர் சில வார்த்தைகளைச் சொன்னான்.
நம்ப முடியவில்லை என் செவிகளை! இந்நிலையில் பொதுவாக மற்றவர்கள் இரக்கம் காட்டுமாறு உயிர்ப் பிச்சை கோருவார்கள் ... ஆனால் நீயோ மூன்றே மூன்று வார்த்தைகளைக் கூறி என் கைகளை கட்டிப் போட்டு விட்டாயே! பலே கில்லாடிதான் நீ...!


என் கூட்டாளியாக சம்மதமா?
சரித்திரம் இதுவரை கண்டிராத அபாரமான குயுக்தி மூளை கொண்ட நீயும், அசாத்திய செயலாற்றல் கொண்ட நானும் கூட்டாளிகளா... அற்புதமான யோசனை ஸ்பைடர்.! ஒப்புக் கொள்கிறேன்!
இதையடுத்து, ஸ்பைடரின் தளைகளை களைந்தெறிந்தான் நரச ாரன்...பின்னர் ஸ்பைடர் தன் சகாக்களை விடுவித்து அவர்களை தன் புது கூட்டாளிக்கு அறிமுகம் செய்து வைத்தான்...
இந்தச் சொறிநாயின் பெயர் — ஆர்டினி ... அந்நாளில் பெட்டகங்களை உடைத்துத்திறப்பதில் நிபுணன் என்று பெயர் வாங்கியவன் ...
ஆ...வ்—ஊய்ய்!
ாரி... உன் மணிக்கட்டு லும்புகளை நொறுக்குவல்ல என் நோக்கம் — ன்னுடைய வலிமை எத் ன்மையது என்று சில நேரங்களில் எனக்கு றந்து போய் விடுகிறது!


விருந்து ஒன்றுக்கு உடனடியாக ஏற்பாடாகியது...
சமூக விரோதிகள் சங்கத்தை பூண்டோடு அழிப்பது நம்முடைய முதல் கூட்டு முயற்சியாக இருக்கட்டும்!
அவர்கள் வசமுள்ள அனைத்து கொள்ளைப் பொருட்களும் இக்கணமே நமது சொந்தமாகி விட்டதாக உறுதி கூற முடியும் என்றால்!
உங்களுடைய கூட்டுத் தலைமையின் கீழ் இயங்கவிருக்கும் நம் குழுவுக்கு நிகர் பூமிதனில் வேறெதுவும் இருக்க முடியாது!
அன்றிரவு, சமூக விரோதிகள் சங்கத்தின் மர்ம தலைவனான நிழல் அரக்கன் மீண்டும் உறுப்பினர் கூட்டம் ஒன்றைக் கூட்டினான்...
உங்களுக்கெல்லாம் ஆனந்தத்தை தரும் இனிய செய்தி...நாசகாரன் ஸ்பைடரை வென்று விட்டான்—இன்னும் சிறிது நேரத்தில் ஸ்பைடரை இங்கே கட்டியிழுத்து வந்து உங்கள் கண்ணெதிரே அழிக்கப் போகிறான்!
யிப்பீபீ...!
ஹா...ஹாஹ்ஹா...! நாசகாரன் எதையும் சாதிக்கக் கூடியவர் என்று நான் முன்பே சொன்னேனில்லையா?



று திமிடம்... ஸ்பைடரை சங்கிலியால் பிணைத்து, தூக்கிக் கொண்டு வந்தான் நாசகாரன்... சமூக விரோதிகள் சங்க உறுப்பினர்களுக்கு அரிய விருந்தாக அமைந்தது அந்தக் காட்சி...
சொன்னபடியே செய்து விட்டேன்... இப்போது உங்களுக்கெல்லாம் திருப்தி தானே!
இது நமக்கு ஒரு பொன்னான நாள்—
நாசகாரன்... வாழ்க!
இனி இந்தப் பயலின் இடையூறு இன்றி நாம் நிம்மதியாக தொழில் நடத்தலாம்!


ஸ்பைடரை நான் அழிக்கு முன் தன்னுடைய கடைசி விருப்பமாக தன் வசமுள்ள சிலபிரத்யேக படச்சுருள்களை உங்களுக்குப் போட்டுக் காட்ட விரும்புகிறான்...
இது என்ன புது விவகாரம்? இது என்ன சமூக விரோதிகள் சங்கமா இல்லை சினிமா கொட்டகையா?


நாசகாரனுக்கு நன்றி...! இதோ— முதல் படம்... 'பிச்சுவா' பின்னியனின் சகாக்கள் பாங்க் ஒன்றை கொள்ளையடித்து விட்டு தப்பியோட முயற்சிக்கும் போது எடுக்கப்பட்ட காட்சி...
BANK
ஆமாம்... போலீஸார் என் சகாக்களில் சில திறமைசாலிகளை அப்போது கொன்று விட்டார்கள்...
தவறு! உன் சகாக்களை சுட்டுத்தள்ளியது போலீஸார் அல்ல...கவனித்துப்பார் ... 'தலைவாங்கி' தாமஸும் அவன் கூட்டத்தினரும் பக்கத்து கட்டிட உச்சியிலிருந்து உன் சகாக்களை குறிவைப்பதைப் பார்த்தாவது நடந்தது என்ன என்ற உண்மையைப் புரிந்து கொள்!
கொன்றது போலீஸார் என்றல்லவா இத்தனை நாளும் எண்ணிக் கொண்டிருந்தேன்!







...தாமஸ்—அயோக்கிய நாயே!
என்னுடைய எல்லைக்குள் அத்துமீறி வந்ததற்கான தண்டனை அது!
ஸ்பைடர் சீக்கிரம் நடக்கட்டும்—


இதே ரீதியில் மேலும் சில படங்களை ஸ்பைடர் போட்டுக் காட்டியதை தொடர்ந்து அங்கே தழுமியிருந்த போக்கிரிகள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளலாயினர்...
நாம் எதிர்பார்த்தபடியே நடக்கிறது — வாயுத் துப்பாக்கியை பயன் படுத்தவேண்டிய தருணம் வந்து விட்டது...
ம்...தாராளமாக!


ஓரிரு நிமிடங்களுக்குப் பின் செயல் முடக்க வாயுவின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்ட போக்கிரிகள் அனைவரும் அங்கங்கே அப்படியே சிலை போல் நிலைத்து நின்று விட்டனர்...
பார்ஸில் ஒவ்வொருத்தனும் கொள்ளை கொள்ளையாய் பணம் வைத்திருக்கிறன்... அணிந்து கொண்டிருக்கும் அணிகலன்களும் விலைமதிப்பற்றவை—சரியான வேட்டைதான் நமக்கு!
வாயுவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்னர் நீயும் நானும் கூட்டாளிகள் என்ற உண்மை தெரியவரும்போது இவர்களுக்கு பைத்தியமே பிடித்து விடப் போகிறது...



திடீரென்று, நிழல் அரக்கன் அமர்ந்திருந்த கண்ணாடி கூண்டுக்குள்ளிருந்து ராட்சஸ அளவிலான இரண்டு கைகள் நீண்டு வந்தன...
நயவஞ்சகம்... மோசடி... துரோகம்!
அவனை... அல்லது அதை —என்னிடம் விட்டுவிடு! எதையும் அழிக்கும் ஆற்றல் எனக்குண்டு!
ஆவ்...எத்தனை பெரிய கைகள்! நிழல் அரக்கன் நிச்சயம் ஒரு மானிடனாக இருக்க முடியாது...!
விஷ்ஷ்...
முட்டாள்...! வெப்பக்கதிர் வீச்சு நிழல் அரக்கனை எதுவும் செய்து விட முடியாது...!
அப்படியா சரி—வேறு உபாயத்தை கையாளுகிறேன்



வீரிய மோதிரத்திலிருந்து வெளிப் படும் இந்த ...—ஹாஆஆ!
எந்த வீரிய கதிர்களும் என்னை ஒன்றும் செய்ய முடியாது—துரோகியே... உன்னை இப்போதே அழிக்கிறேன் பார்!


சர்ர்ர்...
தோல்வி என்னை நெருங்கும் போது என் திறமையும் சக்தி யும் பன்மடங்காகிவிடும் ... தனித்தனியே பிரயோகிக்கப் பட்ட போது உன்னிடம் தோற்றுப் போன என் இரு விசேடசக்திகளையும் இப்போது ஒரு சேர இயக்குகிறேன் — என்னதான் நேரிடுகிறது என்று பார்ப்போமே!



F-4



சட்டென்று கண்ணாடிக் கூண்டுக்குள்ளிருந்து பாய்ந்து வெளியேறியது தெளிவில்லாத நிழல் உருவம் ஒன்று...
உள்ளே என்னதான் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து விடலாம்!
அப்படியே காற்றில் கரைந்து மறைந்து போகிறது!
கண்ணாடிக் கூண்டை உடைத்துத் தகர்த்தான் நாசகாரன்.
விநோதமான இயந்திர பொறி அமைப்புதான் மிஞ்சி இருக்கிறது... என் யூகம் என்னவென்றால்—இங்கே பூமியில் குற்றவியல் முறைகளைப்பற்றி ஆராய்ந்தறிய வேறு கிரகத்திலிருந்து வந்த நிழல் அரக்கன் எப்படியோ சமூக விரோதிகள் சங்கத் தலைமையை கைப்பற்றிக் கொண்டிருக்கக்கூடும்!


பின்னர்—
ஹா...ஹ்ஹா... சமூக விரோதிகள் சங்க உறுப்பினர்கள் நம்முடைய விஷமத்தனத்தை அவ்வளவாக இரசிக்கமாட்டார்கள்என்பதுஉறுதி!
அதைப் பற்றி நமக்கென்ன கவலை? மீண்டும் நம் வழிக்கு வந்தால் நன்றாகவே பாடம் புகட்டி அனுப்பிவைப்போம் அவர்களை!



ஸ்பைடரின் பாசறையில்—
கிடைக்கும் சிறு வாய்ப்பையும் உனக்கு சாதகமாகஉறுதி செய்துகொள்ளும்அசாதாரண வேகம்என்னை வியப்பிலாழ்த்துகிறது... பார்ட்னர்!
மூர்க்கத்தனத்தை அரிச்சுவடியாகக் கொண்ட அழிவுக் கலையின் ஆரம்ப பாடமல்லவா அது!


... மின்னல் வேகத்தில் பாய்ந்து எழுந்த ஸ்பைடர் திருப்பித் தாக்கிறான்
ஆமாம்— உண்மைதான்!
போதும்...! தோழமையுணர் வோடு நாம் போடும் இந்த விளையாட்டுச் சண்டை விபரீ தமாகி விடுமுன் நிறுத்திக் கொண்டுவிடுவோம்!
பிரச்னைகளை சமாளிக்கும் உன் வல்லமைக்கு ஈடு இணையே கிடையாது ஸ்பைடர்! உன் தொழில் முறை கூட்டாளியாக இருப்பதில் மிகவும் பெருமையடைகிறேன்!
இருவரும் சேர்ந்து ஒரு வழியாக சமூக விரோதிகள் சங்கம் கலைக்கப்படச் செய்து விட்டோம்!
...இனி குற்றவியல் குழு தலைவர்கள் ஒவ் வொருவரையும் தனித்தனியே தாக்கு வோம்... அவர்கள் சேகரித்து ஒளித்து வைத்திருக்கும் விலைமதிப்பற்ற கொள்ளைப் பொருட்களை விரைவிலேயே நம்முடைய தாக்கிக் கொள்வோம்!
அந்த முயற்சிக்கு, நான் ஏற்கனவே வடிவமைத்திருக்கும் இந்த மினி-ராக்கெட்டுகள் பெரிதும் உதவியாக இருக்கும்!


திருட்டுக் கும்பல்களோடு தனித்தனி
யே மோதுவதற்கான முயற்சியை
மேற்கொள்ளுமுன் வியத்தகு தீரர்
களான ஸ்பைடரும் நாசகாரனும்
யார் யாரை தாக்குவது என்று
தீர்மனிக்க ஒரு விந்தை
விளையாட்டை ஆடினர்...
இதோ ... 'தலைவாங்கி' தாமஸை நான் கெலித்து விட்டேன்-எனவே, அவனை 'கவனிக்க'ப் போது நான் தான்!
சரி... ஆனால் 'பிச்சுவா' பின்னி இதோ என்னிடம்!—அவன் எனக்கு!
பின்னர்— 'தலைவாங்கி' தாமஸின் ஆடம்பர பாசறையில்...
அதோ ஸ்பைடரின் ஹெலி கார் ஓடி வாருங்கள் தோழர்களே — பதுங்கு தளத்தினுள் ஒளிந்து கொள்வோம்!



பதுங்கு தளத்தின் உள்ளே—
மூன்றடி கனமுள்ள இரும்புக் கதவை தாளிட்டு விட்டேன்... இதனுள்ளே இன்னும் பத்து வருடங்களுக்கு நாம் ராஜ வாழ்க்கை வாழலாம்— ஒரு பயல் நம்மை எதுவும் செய்து கொள்ள முடியாது!
அணுகுண்டு கூட நம்மை அச்சுறுத்த முடியாது இனி! பாவம்...ஸ்பைடர் மனமொடிந்து தோல்வியோடு திரும்பப் போகிறான்!



பதுங்கு தளத்துக்கு நேர் மேலே வந்ததும் ஸ்பைடர் ஹெலிகாரிலிருந்து மிகச் சக்தி வாய்ந்த மின் காந்த அலைகளை கீழ் நோக்கிப் பீச்சினான்...
அந்த பதுங்குதளம் மொத்தத்தையும் சுலபமாக தூக்கி விடப் போகிறேன்!


ஹெலிகாப்டரிலிருந்து கேபிள்கள் நீண்டு பதுங்குதளத்தை பிணைத்துக் கொண்டதும் மின் காந்த அலை வீச்சை அணைத்துவிட்டான் ஸ்பைடர்!
ஸ்பைடரின் வாகனமும் அசாத்திய திறன் கொண்டது என்பதற்கு இது ஒரு சான்று...



அடுத்து...
திரும்பத் திரும்ப இப்படி பாறை மீது விசையோடு மோதச் செய்தால் எப்படிப் பட்ட வலுவான கட்டுமானம் கொண்டதாக இருந்தாலும் பதுங்குதளம் திறந்து கொண்டு விடும்!


உள்ளே—
...எ...என்ன? விபரீதம் இது—பாஸ்?
வாயை மூடு சனியனே— கேள்வி கேட்க நல்ல நேரம் பார்த்தான்...!
சட்டென்று கேபிள்களை விலக்கி பதுங்கு தளம் கீழே விழச் செய்தான் ஸ்பைடர்!
சுகமான அனுபவம்தான்— இல்லையா..., பன்றிகளே!


பொத்தென்று தரையில் விழுந்த பதுங்கு தளம் நிலைத்து நின்ற பின்னர்—
வேடிக்கை விளையாட்டு போதுமென்று நினைக்கிறேன்— இனி ...வந்த வேலையை கவனிக்க வேண்டும்! முதலில் லாசர் கதிர்களை பாய்ச்சி ஓட்டை போடப் போகிறேன்



மிரட்சியோடு வெளியே பாய்ந்ததும் உள்ளே இருந்த கும்பல்...
ஸ்பைடரின் தலையை கொய்து கொண்டு வருபவனுக்கு ஒரு கோடி டாலர் வெகுமதி கொடுக்க நான் தயார்!
ஒரு டாலர் கூட பெற்றுக் கொள்ளாமல் சும்மாவே அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க நான் தயார்— அளவுக்கு அந்தச் சனியன் மீது வெறுப்பு... ஆத்திரம்—கோபம்!


ஆனல் —
என் மயக்கவாயுவை அனுபவிக்காமல் ஓடினல் எப்படி?


பதுங்குதளத்தினுள் குவித்து வைத்து வைக்கப் பட்டிருந்த விலை மதிப்பற்ற கொள்ளைப் பொருட் களின் அருகே மினி—ராக்கெட் ஒன்றை வைத்தான் ஸ்பைடர்...
நாசகாரன் தந்த குறிப்புகளின்படி ராக்கெட்டின் மூக்குப் பகுதியை இரண்டு முறை திருகி விட்டேன்...நொடியில் அது முழுப்பரிமாணம் கொண்ட ராக்கெட்டாக உருப்பெற்று விடும்!



அதன் பின்னர்...
இதோ...என் பணியின் முக்கிய நோக்கம் வெற்றிகரமாக முடிந்து விட்டது... ஆனாலும் இன்னும் கொஞ்சம் வேலை இங்கே பாக்கி இருக்கிறது
வலைத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட இழைகளால் பெரிய பலூன் போல் தயாரித்து எடுத்த ஸ்பைடர் அதனுள், இன்னமும் மயக்க வாயுவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடாத எதிரிகளை போட்டு மூடினான்
இன்னுமொரு உல்லாசப் பயணம் உங்களுக்கு இப்போது தயாராகி விட்டது ..தம்பிகளா!



ஹீலியம் வாயுவை நிரப்பி பலூனை உப்பும்படி செய்தான் ஸ்பைடர் ... பலூன் மேலேறி மெதுவாக பறக்கத் தொடங்கியது.
ஹீலியம் வாயு மெள்ளத்திறனிழந்து பலூன் தரையிறங்கும் நேரத்தை துல்லியமாக கணித்துப் பார்த்தால் இவர்களுக்கு மிகவும் ஏற்றதொரு சூழலில் போய் அகப்பட்டுக் கொள்வார்கள் என்பது உறுதி!
ஸ்பைடரின் கணிப்பில் பிழை இல்லை!
மிக மோசமான சதுப்பு நில பிரதேசம்! எங்கு பார்த்தாலும் பயங்கர முதலைகள் ... கொடிய நச்சுப் பாம்புகள்! அந்த ஸ்பைடர் பயல் மட்டும் என் கையில் கிடைத்தால் அப்படியே அவனுடைய மென்னியை முறித்து—
விடைபெறுகிறேன் ... தம்பிகளா!


பிறிதோரிடத்தில் ... நாச காரனின் தாக்குதலுக்குப் பயந்து பின் வாங்கி ஓடிய 'பிச்சுவா' பின்னியும் அவனது சகாக்களும் பாது காப்பான இடம் என்று அவர்கள் கருதிய மேல்நிலை தொட்டிக்குள் போய் பதுக்கிக் கொண்டனர்!
நாசகாரன் விடாமல் பின் தொடர்ந்து வருகிறான். அவனுடைய வீரிய மோதிரம் தோட்டாக்களை சிதறியோடச் செய்கிறது!
இம் மாதிரி நெருக்கடியி லிருந்து தப்புவதற்காக என்றே என் வாழ்நாளில் பெரும் பகுதியை செல விட்டு தயாரித்த விசேட வாகனம், இதோ—



சில கணங்களுக்குப் பின்—
என்னிடமிருந்து அத்தனை சுலபத்தில் தப்பிவிட முடியுப் என்று நம்புகிறயா?
தப்பிச் செல்வது மட்டுமல்ல... அதற்கு மேலும் சாதிக்க முடியும் என்னல்!



விலகிச் சென்ற அந்த விந்தை வாகனம் மீண்டும் அசுர வேகத்தில் நாசகாரன் இருந்த தொட்டியை நோக்கி விரைந்து வந்தது...
என்னுடைய வழியில் குறுக்கிட்ட முட்டாள் தனத்துக்கு இப்போது பாடம் கற்றுக் கொள்ளப் போகிறாய்...
வேட்டைக்கு வந்தவனே, வேட்டையாடப்படும் கதையாகி விட்டதே...!


முதன் முதலில் கொடி மரத்தைக் கண்டுபிடித்தவனுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக...!


கொடி மரத்தை பாய்ந்து பற்றிக் கொண்ட அதே வேகத்தில் சுட்டிக் குரங்கைப் போல் சரசரவென்று கீழே சறுக்கிக் கொண்டு தரையை வந்து தொட்டான் நாசகாரன்...



கொடிமரத்தை பிடுக்கி
எடுத்தான் நாசகாரன்...
பின்னர்...
இதோ வருகிறது—எவுகணை...! ...ஹீய்ய்...!



பறந்து சென்ற கொடிமரம் அந்த
விந்தை வாகனத்தின் கட்டுப்பாட்டு
அமைப்பை தகர்த்து விட்டுச்சென்றது ...
ராட்சஸ குத்தீட்டி மயிரிழை இடைவெளியில் நம்மை தொடாமல் போகிறது......
க்ராஷ்
பிரமாதம்...! பலே...பலே!


ஹாஹ...ஹா! கொடி மரம் இந்த வாகனத்தின் கட்டுப்பாட்டு விசையை பழுதடையச் செய்திருக் கக்கூடும்... வாகனம் தள்ளாடுகிறது!


நாசகாரன் விசையோடு வந்து மோதி யதும் வாகனம் பக்கவாட்டில் சாய்ந்து விட்டது.



ாளே அகப்பட்டுக் கொண்டவர்கள்
ளியே வரத் திணறினார்கள்...
ங்களை விடுவிக்க நாளாயிற்று... ஹாஹ்ஹா!
ஊய்...ய்!


கணம், மின்னல் வேகத்தில் அனை
ரையும் இழுத்து வெளியே எறிந்தான்
சகாரன்...
வெளியே வாருங்களடா நாற்றமடிக்கும் பெருச்சாளிகளா!
ஊய்ய்...ய்!
ஆ ஆவ்வ்!
உப்ப்...!


அந்த கும்பல் பல்வேறு வழிப்பறி, கொள்ளை, திருட்டுக் களில் சேகரித்து வைத்திருந்த அனைத்து பொக்கிஷங் களையும் எடுத்து வந்து அம்பாரமாக குவித்தான் நாசகாரன்...
இப்போதுஇந்தமினி-ராக்கெட்டின் மூக்குப் பகுதியை இரண்டு முறை திருகி கீழே வைத்து விட்டே னென்றால் தேவைப்படும்அளவுக்கு அது பெரிதாகிவிடும்.
சில நிமிட இடைவெளிக்குப் பின்... இருபதடி நீளத்திற்கு உருப்பெருக்க மடைந்த ராக்கெட் விலையுயர்ந்த பொருட்களோடு தன் பயணத்தைத் தொடங்கியது...
அடுத்து அவனுடைய கவனம் நம் மீது திரும்பக் கூடும்...வாருங்கள் ஓடிப் போய் விடலாம்!
அந்தப் புழுக்கள் ...! உங்களை கொல்வது எனக் பெருமை சேர்க்கும் காரியமல்ல!




தே நாளில்—பிற்பகலில்...'அடுத்துக்
கடுக்கும்' ஆல்பர்ட் தான் கொள்ளை
டித்து சேகரித்த பொருட்களுக்கு ஓர்
றைவிடமாக பயன்படுத்திய பூச்செடி
ன் விற்பனைக் கூடத்திற்குள் ஸ்பைடர்
ரவேசித்தான்...
இதோ! நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை!
ஆனால்...
ஹாஹ்ஹா... நான் இங்கே பூக்கூடைக்குள் ஒளிந்து கொண்டிருப்பேன் என்று நீ கொஞ்சமும் சந்தேகித்திருக்க மாட்டாய் ஸ்பைடர்! அந்த சிறு பிழைக்கு நீ கொடுக்கப் போகும் விலை என்ன தெரியுமா—உயிர்!
உன் வேடிக்கைப் பேச்சைக் கேட்டு எனக்கு சிரிப்புத் தான் வருகிறது... ஆல்பர்ட்!


...நான் இங்கே தனியா
வரவில்லை என்ற உண்மை
உனக்குத் தெரியாதா
என் சகா...நாசகாரனை
இன்றும் நீ சந்திக்க
வில்லையா?
இல்லே ஸ்பைடர் ... இதோ—
இப்போது தான் அறிமுகம்
நடக்கிறது!


வேண்டாம்...கேள்— நானும்
உங்களோடு சேர்ந்து கொள
கிறேன்...இக்கணமே!
எங்கள் கூட்டாளியாக
உனக்கென்ன யோக்
யதை இருக்கிறதடா ...
அற்பப் புழுவே!


ஸ்பைடர்...!இந்தா பிடி பார்க்கலாம்!
மிரட்சியடையாதே
வைததுக் கொள்ளத் தகுதி யற்றது... அதை நான் வீசி எறிந்து விட்டால் கோபித்துக் கொள்ள மாட்டாயே பார்ட்னர்!
ஆ...ஐயோ—வேண்டாம் ...என்னை விட்டுவிடு ஸ்பைடர்!


இருந்து...என்றாவது ஒருநாள் உன்னைப் பழிவாங்காமல் விடப் போவதில்லை நான்!
டமால்!
சில நிமிடங்களுக்குப் பின்—
FLORIST
ஆ...! உப்...! உஷ்ஷ்...அம்மா!
நீ சேகரித்து வைத்திருந்த கொள்ளைப் பொருட்கள் அனைத்தையும் சுமந்து கொண்டு இதோ கிளம்பி விட்டது எங்களுடைய ராக்கெட் ... இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்... ஆல்பர்ட்?


சரி...இவனோடு நமக்கென்ன பேச்சு— வா...பார்ட்னர் போகலாம்!
முக்கியமான புள்ளிகளை எல்லாம் கவனித்தாயிற்று ...சர்வ வல்லமை பொருந்திய கூட்டாளிகளாகிய நம்மை எதிர்க்க இனி ஒரு பயலுக்கு தைரியம் இராது
சமூக விரோதிகள் சங்கம் உங்களுடைய விஷமத்தனங்களை ஒருபோதும் மன்னிக்காது... விரைவிலேயே உங்களுக்கு அழிவு நிச்சயம்!
ஸ்பைடர் கையாண்ட தந்திரத்தினால் உறுப்பினர்களிடையே ஒருவர் மீது ஒருவர் சந்தேகமும், வெறுப்பும் ஏற்பட்டு ஏறத்தாழ உடைந்து போன நிலையிலிருந்த சங்கம் அவசர அவசரமாக மீண்டும் கூட்டப்பட்டது.
ஸ்பைடரையும் நாசகாரனையும் அழித்தாக வேண்டும்—அதுவும் உடனேயே!
எங்களுக்கும் சம்மதம் தான் ,ஆல்பர்ட்! — ஆனால் அந்த சைத்தான்களை எப்படி அழிப்பது?


நம் உறுப்பினர்கள் அனைவரின் ஒட்டு மொத்த சக்தியையும்மிஞ்சியது தங்கள் இருவருடைய கூட்டுப் பலம் என்று ஏற்கனவே சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டார்களே!
உண்மைதான்... அவர்க இருவரையும் அழிக்க அவ களை மிஞ்சிய ஆற்றலுடை சூப்பர் வில்லன்கள் இருவ ரால்தான் முடியும்! இதோ-
ஸ்பைடரால் வெற்றி கொள்ள முடியாது போன முன்னாள் எதிரிகள் இருவர்—இயந்திர பொம்மைகளின் பேரரசனும்... ''மிஸ்டர் மர்மமும்''! இவர்கள் ஸ்பைடரையும் நாசகாரனையும் கொல்வதாக வாக்களித்திருக்கிறார்கள்!


தொலைவிசை இயக்கு முறையில் இயங்கிய டி. வி. காமிராவின் உதவியோடு, அங்கே நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியை தங்களுடைய இருப்பிடத்தில் இருந்தவாறே டி.வி. திரையில் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தனர் ஸ்பைடரும் நாசகாரனும்
ஓகோ...அப்படியா சேதி? என் பரம எதிரிகளான இயந்திர பொம்மைகளின் பேராசையும், மிஸ்டர் மர்மத்தையும் கூலிக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறார்களா இந்த கையாலாகாத பேடிப் பசங்கள்!





**இயந்திரப் பொம்மைகளின் பேரரசனுடன் ஸ்பைடர் மோதிய சாகஸம் "கொலைப் படை"யில் (லயன் வெளியீடு எண்: 8) சித்தரிக்கப் பட்டிருந்தது.**


**'மிஸ்டர் மர்மத்தை' ஸ்பைடர் முறியடித்த கதை விரைவில் வெளிவரும்!**


இது ஒரு பிரச்னையே அல்ல... ஸ்பைடரை என்னிடம் விட்டு விடுங்கள்...ஏனெனில் எங்களில் ஸ்பைடரோடு முதலில் மோதிய நபர் நான்தான்—பேரரசர் நாசகாரனை கவனிக்கட்டும்!
ஸ்பைடரை அழிக்கும் பெருமை உனக்கு கிடைக்க வேண்டுமென்றால் அதற்கான தகுதியை நிரூபிக்க நீ இப்போது என்னோடு சண்டையிட்டு வெற்றி கொள்ள வேண்டும்... வா!
ங்கே நடந்த சண்டையை ஸ்பைடரும் நாச ரனும் டி. வி. திரையில் பார்த்து ரசித்துக் காண்டிருந்தனர்
பூ...! உன்னை இனி அழிப்பது மிகச் சுலபம்...! ந்து விநாடிகள் உனக் க ஒதுக்குகிறேன் — நீ னியும் உயிர் வாழத் தகு ள்ளவன் தான் என்பதை திருபி பார்க்கலாம்!
ரசிக்கத் தகுந்த நிகழ்ச்சி தான்!
இம்மாதிரி எதிரிகள் இல்லை என்றால் நம் வாழ்க்கையிலும் சுவாரஸ்யமே இல்லாமல் போரடித்துப் போய்விடும்!


அங்கே ஸ்பைடரின் பாசறையில்—
சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க போரடிக்கிறது... இந்த இயந்திர சிலந்தியை ஆட்டத்தில் பங்கு கொள்ள இப்போது அனுப்பி வைக்கிறேன்!
மறு நிமிடமே...தன் இலக்கை சென்றடைந்து விட்டது இயந்திர சிலந்தி.
ஜெட்-அமைப்பில் இயங்கும் என் இயந்திர சிலந்தி இடை-யில் புகுந்ததும் அந்த பன்றிப் பயல்களின் முகத்தில் பீதியும் கலவரமும் தோன்றுவதை பாரேன்!
நல்ல வேடிக்கை!


ஸ்பைடர் பேசுகிறேன்..
சிறுபிள்ளைத்தனமான
சண்டையை உடனே
நிறுத்திவிட்டு உங்களுக்கு
நான் விடும் சவாலை கவன
மாகக் கேளுங்கள்...
ஸ்பைடர்...!


இன்று பிற்பகல் சரியாக3-00 மணிக்கு பரிசோ
தனையாக நியூக்ளியர் வெடிகுண்டு ஒன்றினை
பஸிபிக்கடலில் உள்ள ரிகர்-மார்ட்டர் தீவில்
வெடிக்கப்போகிறார்கள்... சரியாக 2-45
மணிக்கு நானும் எனது பார்ட்னர் நாசகார
னும் உங்களிருவரையும் அங்கே எதிர்பார்த்
கிறோம் அடுத்த பதினைந்து நிமிடங்களுக்கு
நமக்கிடையே நடக்கும் ஜீவ மரணப் போ
ராட்டத்தில் வெற்றி பெறுபவர்கள் தப்பிச்
சென்று விடலாம்... தோற்றுப் போனால்
நியூக்ளியர் வெடிகுண்டுக்கு பலியாக
வேண்டியிருக்கும்--சம்மதமா...?



சவாலே...
எற்கிறேம்!
தயக்கமின்றி—
மகிழ்ச்சியோடு!


உன் இயந்திர தூதுவனை எத்தனை சுலபமாக பிய்த்து எறிந்து விட்டேன் என்பதை கவனி...! உனக்கும் இந்தக் கதிதான்—ஸ்பைடர்!
ஸ்பைடரை எதிர்த்து நின்று அழிக்கும் உரிமை பேரரசருக்குப் போய் விட்டது ... நாசகாரனை நான்கொல்வேன்!



F-5


சிதைக்கப்பட்ட இயந்திர சிலந்தியினுள்ளிருந்து திடீரென்று புகை மூட்டம் கிளம்பியது...
ஹோ...விஷ வாயுவோ? ஹாஹ்...ஹா!
இல்லே... நா... நா... ஹாஹ... நான் நினைக்கிறேன் ... இது...ஹஹ்ஹா... சிரிப்பூட்டும் வாயு!
ஹீ...ஹீ...இது உனக்கு... ஹாஹ்ஹா... சிரிப்பூட்டக்கூடும் ஸ்பைடர்! ஆனல் ... ஹாஹ்ஹா...இறுதியில் வெற்றிச் சிரிப்பு ...ஹீ.ஹீ...சிரிக்கப் போவது நாங்கள்தான்!
கிண்டல் பண்ணுகிருய்... ஹீ ஹீ...! அற்ப கொசுவை நசுக்குவதுபோல் உடனே உன்னை நசுக்கிக் கொல்ல வேண்டுமென்று வெறுப்பில் துடிக்கிறது என் மனம்...ஆனுலும்என்னையறியாமல் சி...சி...சிரிப்...பு...ஹாஹ்ஹா...பொத்துக் கொண்டு வருகிறது...!


கிர்-மார்ட்டர் தீவுக்கு புறப்படலாமா ஸ்பைடர்!
வா... பார்ட்னர்— அந்த பசங்களுக்கு பாடம் புகட்டி விட்டு வருவோம்!
மணி 2-45 - இன்னும் சரியாக 15 நிமிடங்களில் வெடி குண்டு வீச்சினால் அழியவிருந்த சிறு தீவில் எதிரெதிரே நின்றார்கள் இரண்டு அணியினரும்...
எதற்காக இவன் டி.வி. காமிராவை இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான் என்று வியப்படைகிறீர்களா? இதுவரை சரித்திரம் கண்டிராத அற்புத சண்டைக்காட்சியை உலகெங்கிலுமுள்ள பொதுமக்களும் டி.வி திரையில் கண்டுகளிக்கட்டும் என்பது என் ஆவா!
நல்ல ஏற்பாடு தான்.! ஸ்பைடரை நான் அழிக்கும் நிகழ்ச்சியை நிச்சயம் எல்லோரும் இரசிப்பார்கள்!


ஆக...நாம் மீண்டும் சந்திக்கிறோம்—இல்லையா ஸ்பைடர்! இம்முறை... வெற்றி எனக்குத்தான் என்பதைநிரூபிக்க நிமிடங்கள் தேவையில்லை-கணப் பொழுதில் சாதிப்பேன்!
மிஸ்டர் மர்மத்திற்கு நீ ஒரு அற்ப புழுவுக்கு சமானம்... நொடியில் உன்னை அழிக்கிறேன் பார்!


ஏற்கனவே ஒத்திகை பார்த்துக் கொண்ட சம்பவம் போலஸ்பைடரும் நாசகாரனும் தந்தம் எதிரிகளை ஒரே நேரத்தில் தூக்கி வீசினர் ...விளைவு--
ஸ்வங்!
பிரமாதம்...பார்ட்னர்!
சுவாரஸ்யமான விளையாட்டுத்தான் இது...!
தானியங்கி டி. வி. காமிரா அங்கே நிகழ்ந்து கொண்டிருந்த மோதலை உலகின் பல பாகங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் கண்டுகளிக்கும் வகையில் ஒளிபரப்பு அஞ்சல் செய்து கொண்டிருந்தது ... டி. வி. பார்த்துக் கொண்டிருந்த சமூக விரோதிகள் சங்க உறுப்பினர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சியில்லை...
ஸ்பைடரும் நாசகாரனும் முழுதாக ஒரு நிமிடம் கூட தாக்குப் பிடிக்க மாட்டார்கள் என்று தப்புக்கணக்கு போட்டேன்... நடப்பது வேறு விதமாக இருக்கிறதே!
அவசரப்படாதே... ஆல்பர்ட்...! பொறுத்திருந்து பாரேன். இறுதியில் நம் ஆட்கள் தான் வெற்றி கொள்ளப்போகிறார்கள்.



கல்லெறி வாங்கிய சொறி நாயைப் போல் இப்படி ஓடினால் என்ன அர்த்தம்?
விசேட இசைக்கருவியில் நான் எழுப்பும் இரகசிய ராகத்தைக் கேட்டதும் கடலினுள் ஒளிந்து கொண்டிருந்த என் நீர்மூழ்கி கப்பல் நீர்ப்பரப்புக்கு மேல் எழுந்து கொண்டதைப்பார்...! இப்போது உனக்கு ஓர் அதிரடி கொடுக்கப் போகிறேன் ஸ்பைடர்!
இதற்கிடையே மிஸ்டர் மர்மம் நாசகாரனை நோக்கி பாறை ஒன்றை வீசினன்...
என் வீரிய மோதிரத்தின் முன் இதெல்லாம் கேளிக்கை விளையாட்டுக்கு சமம்! நாசகாரனை அழித்ததாக சரித்திரத்தில் இடம் பெற வேண்டும் என்ற பேராசை உனக்கிருந்தால் வேறு ஏதாவது உருப்படியான முயற்சியை கையாண்டு பார்!


நீர் மூழ்கி கப்பலின் மேல்தளத்தில் சட்டென்று பல கதவுகள் ஒரே நேரத்தில் திறந்து கொள்ள, உள்ளேயிருந்து பாய்ந்து வெளியேறின — விந்தை விலங்குகள்!
ஹூங்காரத்தோடு அந்த விலங்குகள் ஸ்பைடரை குறி வைத்து ஓடி வந்தன...
நேரடியாக மோத திராணியற்று, பயந்து போய் ஏகப்பட்ட இயந்திர பொம்மைகளை என் மீது ஏவி விட்டிருப்பதன் மூலம் என் வல்லமைக்கு நீ ஈடில்லை என்பதை உறுதி செய்து விட்டாய்...ஹஹ்ஹா...!
சிரிக்கிருயா... சிரி! இன்னும் எவ்வளவு நேரத்துக்கு இப்படி சிரிப்பாய்?



ஓடவும் முடியாது... ஒதுங்கவும் முடியாது... பொறியிலகப்பட்ட எலி போல் திணறி அவஸ்தைப்படு! வெறி கொண்ட என் கொலைப்படையினரிடமிருந்து நீ தப்பவே முடியாது—
நியூக்கிளியர் வெடிகுண்டு வெடித்து இந்த சின்னஞ்சிறு தீவு இன்னும் சில நிமிடங்களில் அழிந்து போகும் அதற்குள் உன்னை வென்று நான் இந்த இடத்தை விட்டு ஓடிப் போக வேண்டும்!
நான் தலையிட்டா ஸ்பைடர்?


மறு கணம்—
ஏய்...என்ன விபரீதம் இது—என் இயந்திர பொம்மைகள் திடீரென்று திரும்பி என்னையே தாக்குகின்றன!
என் நெற்றியில் வைத்து நான் பிடித்துக் கொண்டிருக்கும் கருவி உன் சகோதரர்கள் என்னை நீயாகவும் உன்னை நானாகவும் காணும்படி பார்வை மயக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது! ஹா ஹ...ஹா!
இ...இல்லே வேண்டாம்- போய் அவனை அழியுங்கள்... நான் உங்களுடைய மாஸ்டர்—
139



இன்னும் எண்ணி ஐந்தே நிமிடங்களில் இந்ததீவு நியூக்ளியர் வெடி குண்டு வெடித்து அழிந்துபோகப் போகிறது... இங்கேயே இருந்து நாசமாகப் போங்களடா எருமைகளா — என் சப்மரீனின் உதவியோடு நான்தப்பிச்செல்லப்போகிறேன்!
அது தானே நடக்காது!
க்ராக்!
பெரிய பாறை ஒன்றை தகர்த்து எடுத்த நாசகாரன் அதை பேரரசனின் சப்மரீனை நோக்கி விசையோடு எறிந்தான்...
சனியனே... என் சப்மரீனை நொறுக்கி விட்டாயே! இங்கிருந்து தப்பிச் செல்ல நான் நம்பியிருந்த ஒரே வழி அதுதான் — ஆனால் எனக்கு ஒரு ஆறுதல்...நீங்களும் இங்கேஎன்னோடு இருந்து அழியப் போவது உறுதி!


ஆனல் இம்மாதிரியான இக்கட்டுகளிலிருந்து தப்பிச் செல்ல ஸ்பைடருக்கு வழியா இல்லை...!
ஹெலிகார்!
பரவாயில்லையே! பழக்கப் பட்ட நாயைப் போல் உன் குரல்கேட்ட மாத்திரத்தில் பறந்தோடி வருகிறதே!


இனி நமக்கு இங்கே வேலே இல்லே—கிளம் பலாமா... பார்ட்னர்!
இனியும் இங்கே தாமதித்தால் அழிந்து போய் விடுவோம்!
ஹும்... நான் மட்டும் அழிந்து போவேன் என்று கனவு காண் கிறீர்களா—நியூக்ளியர் வெடி குண்டின் பாதிப்பிலிருந்து தப் பிப் பிழைத்து விடமுடியுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது...
விநாடிகள் கரைந்தன ... அதையடுத்து காது செவிடுபடும்படியான பலத்தஓசை யோடு அந்ததீவு மொத்தமும் வெடித்து சின்னா பின்னப்பட்டுச் சிதறி கடலினுள் மூழ்கியது..இதற்கிடையே வெகுதூரம் விலகிச் சென்று விட்டிருந்தது ஹெலிகார்!
ரிகர் - மார்ட்டர் தீவு அழிந்தது!
டமால்!
அக்கோடு இயந்திரப் பொம்மைகளின் பேர ரசனும் அழிந்து போ யிருப்பது உறுதி!


கள் சங்க உறுப்பினர்களுக்கு ஸ்டைபர் அறிவிப்பதாவது — நீங்கள் நேட்டை போட்டு சேகரித்து வைத்திருக்கும் அனைத்துப் பொருட்களையும் உடனே எங்க கட்டிடத்திற்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்... இல்லையேல் நீங்கள் எங்களை அழிக்க தேர்ந்தெடுத்து அனுப்பிய கடா மாடுகளான பேராசனுக்கும், மிஸ்டர் மர்மத்திற்கும் நேர்ந்த கதிதான் உங்களுக்கும் நேரும்... எச்சரிக்கை!
சங்கம் கூடும் பழைய கிடங்கில் —
... இவன் சொல்கிறபடி செய்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை...
சே...தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப் பந்தத்தில் என் மனம்ஒரே யடியாக வெறுத்துப் போகிறது!


பின்னர்— ஸ்பைடர், நாசகாரன் இருவரது கடுமையான கண்காணிப்பின் கீழ் சமூக விரோத கும்பல்களின் தலைவர்கள் தாங்கள் கொள்ளையடித்து சேர்த்து வைத்திருந்த பொருட்களை அங்கே கொண்டு வந்து சேர்த்தனர்... அவர்களுடைய முகங்கள் உணர்ச்சிகளற்று இறுகிப் போயிருந்தன.
இந்த மினி-ராக்கெட்டுகள் அற்புதமானதொரு கண்டுபிடிப்பு! இவை விரிவடைந்து முழுப்பரிமாணம் பெற்றதும் அந்தப் பொருட்களை கொண்டு வந்து உள்ளே ஏற்றுங்கள்!
ஏதாவது விஷமம் செய்ய முயன்றீர்களோ விளைவு விபரீதமாக இருக்கும்—எச்சரிக்கை!


அதையடுத்து, பறித்துக் கொண்டவர்களும் பறி கொடுத்தவர்களும் ஒருங்கே நின்று விலை மதிப்பற்ற பொக்கிஷங்களைச் சுமந்து கொண்டு அந்த ராக்கெட்டுகள் விரைந்து சென்ற காட்சியை கண்டனர்.
மனமுவந்து நீங்கள் அளித்த இந்தப் பரிசுப் பொருட்களுக்கு நானும் என் பார்ட்னரும் உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டவர்களாவோம்!
சரியாகச் சொன்னாய்...ஸ்பைடர் பேராசை கொண்ட இந்தப் பெருச்சாளிகள் இப்படி தங்கள் பொருட்களை நம் காலடியில் கொண்டு வந்து சேர்ப்பார்கள் என்று யார் தான் எண்ணியிருக்கக்கூடும்?


அந்த ராக்கெட்டுகள் இது வரை அனுப்பப்பட்ட மற்ற ராக்கெட்டுகள் போய்ச் சேர்ந்த வான்வெளி சேமிப்பு மையத்தை இலக்கு வைத்துப் பறந்தன...
இதையடுத்து, சமூக விரோதிகள் சங்கத்தின் கூட்டம் ஒன்று தொடங்கியது...
கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்...! நீங்கள் ஆதிக்கம் செலுத்தும் அத்தனை கும்பல்களும் இனி எங்கள் தலைமையின் கீழ் தான் இயங்கும்... இந்த தீர்மானத்தை மறுப்பவர்கள் இப்போதே தங்கள் கருத்தை தெரிவிக்க வேண்டும்!
அத்தனை பேரும் இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள்...யாரும் மறுக்கக் காணோம்!


குற்றவியலில் ஈடுபட்டிருப் போர் அத்தனை பேரையும் வென்று குற்றவியல் சக்ர வர்த்தியாகி விட வேண்டு மென்ற குறிக்கோள் எனக்கு இருந்தது... நாம் இப்போது கூட்டியுள்ள கூட்டு வெற்றிக் குப் பின் அப்படியொரு தலை மைப் பீடத்தை நாமிருவரும் சேர்ந்தே அலங்கரிக்கலாம் என்கிற நிலைமை உருவாகி யிருக்கிறது. ஆனால் இனி குற்றவியல் குழுவினருக்கு எதிராகபோர்க்கொடி உயர்த்த தீர்மானித்து விட்டேன்!
நான் உன் மீது எந்த அளவுக்கு நம் பிக்கை வைத்திருக்கிறேன் என்று இங் கிருப்போர் சாட்சியாக நிரூபிக்கப் போ கிறேன். இதோ...என் பக்கபலமாக எப்போதும் கைவசம் இருக்கும் துப்பாக் கிகள் இரண்டையும் தூர எறிந்து விட்டேன்!
உன்னுடைய இந்த நல்லெண் ணச்செயல் என் மனத்தை நெகிழ வைக்கிறது ஸ்பைடர்... பதிலுக்கு ...இதோ நானும் என்னுடைய கதிரலை தலைக் கவசத்தையும் வீரிய மோதிரத்தையும் கழற்றி விடுகிறேன்!


ஆனால்--- குற்றவியலுக்கு எதிராக செயல்படப் போவதாக நீ எடுத்திருக்கும் தீர்மானம் தற்கொலைக்கு ஒப்பானது ...எனக்கு அதில் சந்தேகமில்லை... மேலும் இது வரை நாம் சேகரித்த அனைத்து பொருட்களையும் நானே சொந்தமாக்கிக் கொள்ளத் தீர்மானித்து விட்டதால் இப்போது...இக்கணமே உன்னை அழிக்கப் போகிறேன்!
இப்படியொரு நெருக்கடி நேரிடும் என்று என் உள்ளுணர்வு தொடர்ந்து எச்சரித்துக் கொண்டேயிருந்தால் நான் இப்போதும் தயாராகவேதான் வந்திருக்கிறேன்!
இதோ...பிரமிப்பூட்டும் உன் உடல் ஆற்றல் கணப்பொழுதில் வடிந்து சட்டென்று நீ கிழத்தோற்றம் பெற்று விட்டாய்! இது எப்படி நேரிட்டது என்று திகைக்கிறாயா?



பார்த்தாயா- ஜிஸ்மோ கருவி! எந்த விடையும் நீ எனக்கு எதிராக கிளம்பிவிடுவாய் என்று சந்தேகித்து நம்மை நொறுக்கிக் கொள்ளுமுன் இதை என் உள்ளங்கையில் மறைத்து வைத்துக் கொண்டிருந்தேன்..நொடியில் யாரையும் முதுமையடையச் செய்து விடும் ஆற்றல் கொண்டது இந்த ஜிஸ்மோ கருவி!
உன்னை முட்டாளாக்க நினைத்து நானே முட்டாள் பட்டம்கட்டிக் கொண்டேன் ...இனி ... இனி எனக்கு விமோசனமே கிடையாது... ஹூம்...!
ஜிவ்வென்று மேலே கிளம்பினான் ஸ்பைடர்!
'பெரியவரே', மற்ற பசங்களே...! சென்று வருகிறேன்!
எல்லாம் இந்த நாசகாரனால் வந்த வினை..இவனை அடித்து நொறுக்கவேண்டும் போல் ஆத்திரம் வருகிறது- ஆனால் இப்போது இவன் இருக்கும் நிலையை பார்த்தால் பச்சாதாபம்தான் ஏற்படுகிறது!


பின்னர் — ஸ்பைடரின் பாசறையில்...
நாசகாரனும் தொலைந்தான்... நம் தலைவர் வான்வெளி சேமிப்பு மையத்தில் சேர்த்து வைத்திருக்கும் அத்தனை பொக்கிஷங்களையும் திரும்ப வரவழைக்கிறார் ... இனி அவை அனைத்தும் நம் சொந்தம் ...ஹஹ்ஹ...ஹா!
சரியான குள்ள நரித்தனம்...!
ஹே... என்ன இது — அந்த ராக்கெட்டுகளை திசை திருப்பி எங்கே அனுப்பி வைக்கிறீர்கள் பாஸ்!
போலீஸ் தலைமையகத்துக்கு! திருடர்களிடம் பறி கொடுத்த அப்பாவி மக்களை அடையாளம் கண்டுபிடித்து கொள்ளைப் பொருட்களை உரியவர்களிடம் சேர்ப்பிக்க அவர்களால் தான் முடியும்!


என்ன திகைத்து நின்று விட்டீர்கள் ... வாருங்கள் என்னோடு — எல்லோருக்கும் வேலை இருக்கிறது!
பாஸுக்கு மூளைபிசகி விட்டதா ... என்ன?
உஷ்ஷ்.... ...ஷ். ஆர்டினி!
தீய வழியில் நாம் சேகரித்த அத்தனை பொருட்களையும் வெளியே கொண்டு வந்து குவியுங்கள்—ம்...சீக்கிரம்!
ஏதோ...கெட்ட சொப்பனம் இது என்று தான் நினைக்கத் தோன்று கிறது—அடுத்துஎன்ன நடக்குமோ என்று ஒரே வெறுப்பாக இருக் கிறது!



கடைசியாக மிஞ்சியிருந்த ஒரே பொருள் — ராக்கெட்டையும் பெரிதாக்கி அதனுள் அந்தப் பொருட்களையும் ஏற்றிய பின்...
... நீயும் போலீஸ் தலைமையகத்துக்குப் போய் உன் தோழர்களோடு சேர்ந்து கொள்!
ம்... வந்து... ஏன் இப்படிச் செய்கிறாய் என்பதன் காரணத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா... ஸ்பைடர்!
ஓ... தாராளமாக! இந்த... யல் முதலைகளை எல்லா... வெற்றி கொண்டு அந்த... மகிழ்ச்சியை முழுமையாக... கொண்டபின் இனி என... கூடியவற்றை ஆற்றலை நல்ல... வழிகளில் பயன்படுத்தத் தீர்... னித்து விட்டேன்... என... புதிய வழியில் துணை வர... இஷ்டமில்லாதவர்கள் வில... கிச் சென்று விடலாம்— இப்போதே...!
மற்ற சகாக்கள் சட்டென்று அங்கிருந்து அகன்றனர்.
பெல்ஹாம்—! ஆர்டினி நீங்கள் என்னை விட்டுப் போய்விட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்; இப்படி ஒரு விசுவாசத்தைக் காண்பதரிது! உங்களை நினைக்கையில் என் மனம் நெகிழ்ந்து போகிறது!
இவனுடைய மனமாற்றம் உறுதியானதாக இருக்க வேண்டும்!... மீண்டும் வே... தாளம் முருங்கை மரம் ஏறிய கதையாகி விடாமலிருந்தால் சரிதான்!
இந்தக் கிராதகனைப் பகைத்துக் கொண்டு எதிரணியில் இ... பதைவிட, நல்லதோ... கெட்டதோ இவனோடு இருப்பது தான் உத்தமம்!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும் S. விஜயன், முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி - 626 123. போன்: 1159 வெளியீடு எண்: 29.

# உங்கள் கடிதம்!

● **P. D. ஷண்முகம், பெருந்துறை.**

''மர்ம எதிரி'' அட்டைப் படம் ரொம்ப டாப்! கதையும் அதற்கு ஈடாக இருந்தது! சாகஸம், விறுவிறுப்பு அத்தனையும் கொண்ட ஒரு விசித்திரமான விருந்து மாடஸ்டி & கார்வின் தோன்றிய ''பழி வாங்கும் புயல்'' ஸ்பைடரின் வருகை பற்றிய அறிவிப்பு என்னை மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைக்கிறது!

● **N. அண்ணாமலை, உத்தமபாளையம்**

'மர்ம எதிரி' அருமையிலும் அருமை! அட்டைப் படம் படு சூப்பர்!

குற்றவியலின் முடிசூடா மன்னனான ஸ்பைடரா நீதிக் காவலனாக மாறினான்?!! எப்படி?

● **K. K. ஐயப்பன். கோவை-1.**

இரட்டை வேட்டையரின் சாகஸம் மெய்சிலிர்க்க வைத்தது! மாடஸ்டியின் வரலாறும், கார்வினின் சாகஸங்களும் சூப்பர்! இக்கதைகளைத் தரும் லயனுக்கு இச்...இச்...

● **க. பாபு யோகேஸ்வரன். நல்லப்பநாயக்கன்பட்டி.**

2/- ரூபாய்க்கு இரண்டு டக்கர் கதைகளா? எங்கள் அன்புச் சிங்கத்தை மிஞ்ச யாராலும் முடியாது!

● **M. முருகன், முருகன், பைகாரா, மதுரை-17.**

''தீபாவளி மலரில்'' என் அபிமான C. I. D. லாரன்ஸ் இடம் பெறுவார் என்று விளம்பரப் படுத்திய சிங்கத்துக்கு நன்றி!

● **பெ. பாஸ்கரன், பவித்திரம்புதூர்.**

''மர்ம எதிரி'' கதை டாப் டக்கர்! பெர்னாண்டோவின் தந்திரம்! மிக அருமை! நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிவந்த மாடஸ்டி பிளைஸி கதை என் மனதிற்கு மிகவும் பிடித்த கதை! லயன் காமிக்ஸ் இல்லாமல் என் LIFE இல்லை!


● **G. சாயிபிரசாத், ராணிப்பேட்டை.**

வருடா வருடம் தீபாவளிக்கு பட்டாசு எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எங்களை ''தீபாவளி மலர்'' எப்பொழுது வரும் என்று எதிர்பார்க்கும் அளவு எங்களை வியப்பில் ஆழ்த்தி விட்டீர்கள்!

● **லயன் காமிக்ஸ் ரசிகர் மன்றம், பவித்திரம்புதூர்.**


இரண்டு ரூபாய்க்கு நான்கு வீரர்கள் சாகஸமா? (ஜார்ஜ், டிரேக், மாடஸ்டி, கார்வின்)—ஆனால் முடிவில் கேப்ரியலை மாடஸ்டியும், கார்வினும் தப்ப விட்டது எங்கள் மனதை உறுத்தியது!

விண்ணை முட்டும் இமய மலை!
மங்கா ஒளி கொண்ட சூரியன்!
போரில் தோல்வி காணா அலக்ஸாண்டர்!
எம்மாத்திரம் எங்கள் சிங்கத்திடம்?
அற்புத ஹீரோக்கள் யார் வசமோ
எங்கள் அருமை ராஜாவிடம் தான்!
எங்கள் லயனுக்குப் போட்டியாக
ஜூனியர் வருகிறார் பராக்! பராக்!






கதை விபரங்கள் அடுத்த [illegible] பக்கங்களில் ...








நிஜ யங்களின் பின்னணியில் உருவாக்கப்பட்டுள்ள ''இரத்தக் கண்ணீர்'' சித்திரக் கதை உங்களை ஆக்கி விடும்!


லாரன்ஸ் & டேவிட் தோன்றும்
ஆழ்கடல் யுத்தம்!
முறை டேவிட் நிலே தனித்து பலாற்ற வேணா திர்ப்பந்தம்! கடலில் உயிருக் கப் போராடிக் ரண்டிருக்கும லாரனையும், விஞ்ஞானிகளை- மீட்க வேண்டி அவரது பணி!
கதை நம்பர் 3
கொ. தீ. க. வின் அட்டகாசத்தை உங்கள் அபிமான ஜோடி க்கும் சாகஸத்தைக் காணத் தவறாதீர்கள்!


மரண இயந்திரம்!
கதை நம்பர் 4
ந்தனை திமிர் உனக்கு ந்து விட்டதா நாயே? னனை என்ன செய்கிறேன் பார்!
ஆமாம்! கார்வினை தொலைத்துக் கட்டினால் முப்பதாயிரம் டாலர் பரிசு தர தயாராக இருக்கிறேன்! கச்சிதமாக வேலையை டியுங்கள்!
மாடஸ்டிக்கும், கார்வினுக்குமிடையே எழுந்த இந்த பகையில் பலியானது யார்? துடிதுடிப்பான சித்திரங்களுடன் ''மரண இயந்திரம்'' பதிலளிக்கும்!




காலப் பயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் நம் நண்பர்களுக்கு, கூடவே ஒரு தலைவலியும் வந்து சேர்கிறது!


பழையதொரு எதிரியான "பனி பூதம்" மீண்டும் பூமியில் அட்டகாசம் செய்யத் துவங்குகிறது! அதை முறியடிக்கக் கூடிய ஒரே சக்தியோ ஆர்ச்சி தான்!


ஆர்ச்சியின் கோணங்கித் தனங்களும், சேஷ்டைகளும் நிறைந்த இந்த ஜாலியான சித்திரக் கதை உங்களை உற்சாகத்தில் துள்ள வைக்கும்!



# ஷைத்தான் வீடு!




21—17, கணக்கில் நான் வென்று விட்டேன தம்பி!
விச்சு
அந்தப் பொடியனுக்கு 17 பாயிண்ட் கொடுத்தாயா நீ? கர்மம்-கர்மம்-இன்றைய போட்டியில் நீ மண்ணைக் கவ்வப் போகிருய்!
சீரியஸாக நான் ஆடவில்லை கிச்சு!
இந்த லட்சணத்தில் நேரடியாகப் போ
இரண்டாவது சுற்றில விளையாட உ
எந்த மடையன் அனுமதித்தான் என்று
விலலே! ஆனல் ஐயா முதல் சுற்றில்
பெற்றவுடன், உன்னுடன்தான் அடுத்
மோதப் போகிறார்-உன்னை தவிடு பொடி
யாக்கி விடுவேன்!




முதல் சுற்றில் தான் நீ ஆட வில்லையே விச்சு-எங்கள் மாட்சில் நடுவராக இருக்கிருயா?
ஓ, யெஸ்
நான் அடுத்த ஹாலில் தான் விளையாடிக் கொண்டிருக்கிறேன் கிச்சு! இரண்டாவது சுற்றில் சந்திப் போம்!
ாவம், கிச்சு திணறிக் கொண்டிருக்கிருனே!
கோர் 10-12
அச்சச்சோ-கிச்சுவை இந்த மாதிரி புரட்டி எடுக்கிருனே-யாரவன்?






அச்சிட்டோர்: முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.


லயன் காமிக்ஸ்
அடுத்த வெளியீடு!
ஜூனியர் ஆர்ச்சி?